## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.06.2018 கிறிஸ்துவின் திருஉடல் திரு இரத்தம் பெருவிழா-திருப்பலி 02

05.06.2018 தூய போனிபாஸ் - திருப்பலி 03

08.06.2018 திரு இருதய ஆண்டவர் பெருவிழா-திருப்பலி 04

09.06.2018 தூய மரியன்னையின் திருஇருதயம் - திருப்பலி 05

10.06.2018 பொதுக்காலம் 10ஆம் ஞாயிறு - திருப்பலி 07

11.06.2018 தூய பர்னபா திருத்தூதர் - திருப்பலி 08

12.06.2018 அருளாளர் பிரான்சிஸ் கெசியாந் - திருப்பலி 09

13.06.2018 தூய பதுவை அந்தோணியார் - திருப்பலி 11

17.06.2018 பொதுக்காலம் 11ஆம் ஞாயிறு - திருப்பலி 12

23.06.2018 தூய ஜோசப் க.்.பாஸோ - திருப்பலி 13

24.06.2018 திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா - திருப்பலி 14

29.06.2018 தூய பேதுரு, பவுல் திருத்தூதர் பெருவிழா 15

பள்ளிகள் திறப்பு - பள்ளியில் பொது செபவழிபாடு 17


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


இல்லங்கள் தோறும் திருஇருதயம் 19

இயேசுவின் திருவுடல் திருரத்தம் வாழும் புனிதம் 22

தூய பதுவை அந்தோணியாரின் வாழ்வு தரும் பாடம் 25

திருச்சபை செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 03.06.2018 கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழா

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

I. வி.ப. 24:3-8 II. எபி. 9: 11-15 மாற்கு 14:12-16,22-26

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று ஆண்டவர் இயேசு தம் திருவுடலையும் திருஇரத்தத்தையும் நமக்கு உணவாகத் தரும் அவரது பேரன்பைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். உடல் என்பது ஒருவரது ஆளுமையின் மிக வெளிப்படையான கூறு. மனம், ஆன்மா, உணர்வுகள் என்பவை வெளியில் தெளிவாக் காணக்கிடைக்காத ஆளுமையின் தளங்கள். ஆனால் உடல் மட்டுமே அனைவருக்கும் அறிமுகமான, வெளிப்படையான தளம். அதுமட்டுமல்ல உடல்தான் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யத்தகுந்த மிகச்சிறந்த தளமும் கூட. ஆகவேதான் ஆண்டவர் இயேசு தம் உடலை இறைவனுக்காகவும் நமக்காகவும் கையளித்தார். இரத்தம் உயிரின் ஆதாரம். இரத்தம் சிந்துதல் தியாகத்தின் அடையாளம். "இரத்தம் சிந்துதலின்றி பாவ மன்னிப்பு இல்லை" என நமது பாவ மன்னிப்புக்காக இயேசு தம் இரத்தத்தைச் சிந்தினார். எனவே இயேசுவின் உடலுக்காக, இரத்தத்திற்காக இன்று நன்றி செலுத்துவோம். நமது உடலையும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றக் கையளிப்போம். நமது இரத்தத்தைச் சிந்தாவிட்டாலும் பிறர் வாழ தியாகங்கள் செய்ய முன்வருவோம். இன்று நாம் உட்கொள்ள போகும் அப்பமும் பருகுகின்ற இரசமும் இயேசுவோடு நம்மை இணைத்து கடவுளின் வாழ்வில் நம் வாழ்வு இணைந்து ஒன்றிப்பதற்கும் அதன் வழியாக நாம் ஒருவர் ஒருவரோடு சகோதர அன்பில் இணைவதற்கும் ஒரு வழியாக அமைய வேண்டுமென்று தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கினங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. சாவை வென்று உயிர்த்த மாட்சிமிகு இயேசுவே, தொடக்க காலத் திருச்சபையில் இருந்த அதே நம்பிக்கையை எங்களில் உருவாக்கும். பகிர்ந்து வாழும் தாராள உள்ளத்தை எங்களுக்கு தந்து உமது தூய ஆவியினால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழவும் அவ்வன்பை பிறரோடு பகிர்ந்து வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

4. அன்பு இறைவா, அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 05.06.2018 தூய போனிபாஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறைஇயேசுவின் அன்புக்குரிய சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது தூய போனிபாஸ் விழாவைக் கொண்டாடுகிறது. இந்தப்புனிதர் இங்கிலாந்து நாட்டில் கி.பி. 672ல் பிறந்தார். இவரின் திருமுழுக்குப் பெயர் வில்பிரட். இவர் 13 வயதிலிருந்து ஆசீர்வாதப்பர் மடத்தில் கல்வி பயின்று பின்னர் அந்த சபையிலேயே தன்னை இணைத்துக்கொண்டார். பின்பு குருவானவரானவுடன் பிரீஸ்லாந்து என்னும் நாட்டிற்குச் சென்று நற்செய்தி அறிவித்தார். உரோமைக்குச் சென்று, விக்கிரக ஆராதனை செய்கிறவர்களுக்கு நற்செய்தி அறிவித்தார். அவ்வாறு போதிக்க இவருக்கு திருத்தந்தை முழு அதிகாரம் கொடுத்தார். 722ஆம் ஆண்டு ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்பு இந்த புனிதர் பவேரியா நாட்டில் திருஅவையை நிறுவி தலைவர்கள் பலரை நியமித்தார்.

பின்பு நற்செய்திப்பணியாற்ற ப்ரீஸ்லாந்து நாட்டிற்குச் சென்ற இவரையும் இவரோடு 53 துறவறத்தாரையும் வேத விரோதிகள் கி.பி. 754ஆம் ஆண்டு கொன்று போட்டார்கள். இந்தப் புனிதர் "ஜெர்மன் தேசத்து தூய பவுல் அடிகளார்" என்று அழைக்கப்படுகிறார். இவர் தன் வாழ்நாள் குறிக்கோளாக: 1. கீழ்ப்படிதல் 2. செப இல்லங்களை ஏற்படுத்தல் போன்றவற்றில் உறுதியாக இருந்தார். இவரைத் தையல்காரர்களின் பாதுகாவலர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்தப்புனிதரின் வழியில் தைரியமாக பிற மக்கள் மத்தியில் நற்செய்திப்பணி செய்து வாழ்வோம் என்ற உறுதியோடு இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. "எங்களைப் பெயர் சொல்லி அழைத்த இறைவா, நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்" என்று கூறிய உமது திருமகனின் அழைப்பை ஏற்று பணி நியமனம் பெற்றுள்ள எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், துறவிகள், திருநிலையினர் அனைவரும் பணி இலக்கு மக்களை நம்பிக்கை வாழ்வில் கொண்டுச் செல்ல வேண்டிய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையான வாழ்வுக்கு வழி நானே என்று அழைக்கும் இறைவா, எமது நாட்டை ஆளும் அமைச்சர்கள் அதிகாரிகள் ஆள்பார்த்துச்

செயல்படாமல் எல்லா மக்களையும் அரவணைத்துச் செல்லவும் எல்லா மனிதருக்கும் அரசின் பயன்பாட்டை பகிர்ந்தளித்து விருப்பு வெறுப்பின்றி செயல்பட தேவையான அருளைப்பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்றவரே, புனித போனிபாஸ் வழியில் ஆன்ம தாகம் நிறைந்த அநேக மக்களை திருஅவைக்கு கொண்டு வந்து சேர்க்க எங்களுக்கு தைரியமளித்து, விடாமுயற்சியோடு உம் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய ஆற்றலையும் அருளையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.06.2018 இயேசுவின் திருஇருதய பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியா

I. ஓசே. 11:1,3-4,8-9 II. எபே. 3:8-12,17-18 யோவா. 19: 31-37

இறையேசுவில் பிரியமான இனிய மக்களே, நம் பெருமகனார் இயேசு கிறிஸ்துவின் திரு இருதய பெருவிழாவினை இன்றைய தினம் சிறப்பிக்கின்றோம். தூய ஆவியாரின் பெந்தகோஸ்தே தினத்திற்கு பிறகு 19 நாட்களுக்கு பின்பு வரும் வெள்ளிக்கிழமையன்று இவ்விழாவினை சிறப்பு செய்கிறோம். இந்நிகழ்வு திருத்தந்தை பத்திநாதர் கி.பி. 185ல் இயேசுவின் திரு இருதய பக்தியை அறிவித்ததிலிருந்து நடைபெற்று வருகிறது. இயேசுவின் இதயம் இரக்கத்தின் இதயம். பாவப்பட்ட மக்கள் மனந்திருந்தி விண்ணகம் வந்தடைய வேண்டும் என்ற தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்டு தன் உயிரையும் உடலையும் தியாக பலியாக்கி இரத்தம் சிந்தி சிலுவை சாவை ஏற்று பலியானார். அவரின் இதயத்தில் பெருக்கெடுத்த அன்பு அல்லவா இதை செய்ய சொன்னது.

சிலுவையின் வேதனையில் துடித்துக்கொண்டிருந்த நிலையிலும், சிலுவையில் தொங்கிய இயேசு கள்வனை ஏற்று கொண்டாரே அந்த அதீத அன்பு, புனித பேதுரு மும்முறை மறுதலித்த போதும் மன்னித்து ஏற்றுக்கொண்டாரே அந்த இருதய அன்பு, பாவ சேற்றில் அமிழ்ந்து வாழ்ந்த புனித மரிய மதலேன்னா தனது சீடத்தியாக ஏற்றுக்கொண்டாரே அந்த அன்பு, தன்னை சிலுவையில் வதைத்தவர்களுக்காக பரம பிதாவிடம் மன்றாடினாரே அந்த இருதய அன்பு, தன்னைக் காட்டிக்கொடுப்பவன் தன் அருகிலிருந்தும் காட்டி கொடுக்காமல் இருந்தாரே அந்த அன்பு லாசர் இறப்பின்போது கண்ணீர் சிந்தினாரே அந்த இருதய அன்பு. ஆண்டவராகிய இயேசு சிலுவையில் தொங்கியபோது "தாகமாயிருக்கிறேன் என்று கூறிய அந்த வார்த்தையின் வடிவம் இறைவனுக்கு இதயமுண்டு அந்த இதயத்தில் இரக்கமுண்டு அந்த இதய தாகம் அனைவரையும் மீட்டெடுக்கும் தாகம். இறைதந்தையின் தாகம், அளவற்ற இரக்கத்தின் ஊற்று. எனவே அந்த அன்பை இன்று கொண்டாடி மகிழ்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் நாயகனே இறைவா, திருஅவையின் வழிதோன்றல்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள் இருபால் துறவியர் இறைப்பணியாளர்கள் அனைவரும் இயேசுவின் திரு இருதய பெருவிழாவான இந்நாளில் இறையேசுவின் இதய தாகத்தை உணர்ந்து திரு இருதய பக்தியை அகிலமெங்கும் பரப்ப தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்ள ஆன்ம பலத்தையும் அச்சமின்றி இறைப்பணி ஆற்ற வேண்டிய ஆற்றலையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, ஆதரவற்றோர், எளியோர், ஊனமுற்றோர், நிறைந்து வாழும் எம் தேசத்தை உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். இம்மக்களை உம் தூய இருதய அன்பினால் அரவணைத்து ஆதரவளித்து பேரிரக்கத்தோடு வழிநடத்தி காத்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் தலைவா, இனவெறி, மதவெறி பிடித்தலையும், கல்நெஞ்சம் கொண்ட மிருகங்களிடமிருந்து உம்மில் வாழும் கிறிஸ்தவர்களையும் இளம் சிறார்களையும் பாதுகாத்து மேலும் வன்முறைகள் நிகழாதவாறு வழிநடத்திக் காத்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 09.06.2018 தூய மரியன்னையின் திரு இருதயம் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

"ஜென்ம பாவமில்லாமல் பிறந்த புனித மரியாயே உம் அடைக்கலத்தை நாடி வரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"

அன்னை மரியின் பாசத்தில் சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருஅவை மரியாயின் மாசற்ற திருஇருதயப் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. தந்தையாகிய இறைவன் தேவமாதாவுக்குக் கொடுத்த வரங்களை எல்லாவற்றிலும், மிகவும் முக்கியமானது "ஜென்மப் பாவமில்லாமல்" பிறக்கச் செய்ததுதான். மரியா இயேசுவைத் தன் கருவறையில் முந்நூறு நாட்கள் மட்டும்தான் சுமந்தார். ஆனால், இயேசு நாலாயிரம் ஆண்டுகளாக கன்னி மரியாவின் கருவில் உருவாகக் காத்திருந்தார். இவரை ஆண்டவராகிய கடவுள் தொடக்கத்திலேயே உருவாக்கித் தேர்ந்து "உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்று (தொ.நூ. 3:15) அறிவித்த போதே மீட்பராகிய இயேசுவைப் பெற்றெடுக்கும் தாயாக மரியா மாசற்றவராக உருவாக்கப்பட்டு விட்டார்.

"மரியன்னையின் மாசற்ற இதய பக்தியை என் இதய பக்திக்கு இணையாக வைக்க நான் விரும்புகிறேன்" என்று இயேசு ஆண்டவரே வெளிப்படையாகக் கேட்டிருக்கிறார். இயேசு பாலனும் மாதாவும் லூசியாவிடம், "மரியாயின் மாசற்ற இதயம் நன்றியற்ற மனிதரின் முட்களால்

ஒவ்வொரு கணமும் குத்தப்பட்டு நிறைந்து போயிருக்கிறது. பரிகார முயற்சி செய்து அதை எடுப்பாரில்லை, நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு" என்று பரிதாபமாய்க் கேட்டார்கள்.

அந்த முட்களை ஒவ்வொன்றாக அகற்றி அக்காயத்தை நம் அன்பினால் ஆற்ற வேண்டும், நம் ஒவ்வொரு நினைவும், சொல்லும் செயலும் அதற்கு ஏற்றதாய் அமைய வேண்டும். மாதாவின் இதயம் "துயரம் நிறைந்த மரியாயின் மாசற்ற இதயம்" ஆகும். "மாசற்ற" என்ற அடைமொழி இறைவனால் மாதாவுக்கு அளிக்கப்பட்டது. "துயரம் நிறைந்த" என்ற அடைமொழி நம்மீதுள்ள அன்பினால் அன்னையே ஏற்றுக்கொண்டது. மூவொரு இறைவன் மரியன்னையையும், மரியா இறைவனையும் நேசிப்பதில் எந்தக்குறையும் இல்லை. ஆனால், நாம் அவர்களை நேசிப்பதில் மோட்ச ஆனந்தம் இன்னும் முழுமைப் பெறவில்லை. அன்பின் அன்னையாகிய மரியா நமக்கு விடுதலையளித்து, ஆன்மீக எதிரிகளை வென்று, இறைமக்களாக வாழ துணை வேண்டி இன்றைய திருப்பிலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஆதியும் அந்தமுமான இறைவா, இயேசுவின் தாயான மரியாவுக்கு பிரிவினைக் கிறிஸ்துவர்கய் வணக்கம் செலுத்தும் முறையை எதிர்த்து மற்ற சபைகளுக்கு மாறிக் கொண்டிருக்கிற, கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்கள் உமது அளவில்லா இரக்கப் பெருக்கத்தால், விசுவாச உண்மையை உணர்ந்து வாழ வரமருள மரியாயின் மாசற்ற இதயத்தின் வழியாக இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.
2. மகா பரிசுத்தமான இறைவா, உலகெங்குமுள்ள திவ்ய நற்கருணைப் பேழைகளில் இருக்கும் இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்கப்படாத திரு உடலையும், திரு இரத்தத்தையும், ஆத்துமத்தையும் தெய்வீகத்தையும் அவருக்குச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுத்து, பாவிகளை மனந்திருப்பத் தேவையான வரமருள இறைவா, உம்மை மன்றாடுகிறோம்.
3. அமைதியின் அண்ணலே இறைவா, சகோதரி லூசியா 1939 மார்ச் 19ல் எழுதிய ஒரு கடிதத்தில் "உலகத்தில் யுத்தமா, அமைதியா என்பது. நாம் முதல் சனிக்கிழமைப் பக்தியை கடைப்பிடிப்பதில்தான் இருக்கிறது. நம்மையே நாம் மாசற்ற இருதயத்திடம் ஒப்படைக்கவும் வேண்டும். இதனாலேயே இப்பக்தி முயற்சி பரவ வேண்டுமென்று நான் மிகவும் ஆசிக்கிறேன்" என எழுதியுள்ள வார்த்தைகளை நம்பி சனிக்கிழமை பக்தியை கடைப்பிடிக்கத் தேவையான வரமருள மரியாயின் மாசற்ற இதயத்தின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.06.2018 பொதுக்காலம் 10ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

I. தொ.நூ. 3: 9-15 II. 2கொரி. 4: 13-5:1 மாற்கு 3: 20-35

திருப்பலி எனும் திருவழிபாட்டில் பங்கேற்று இறை இரக்கத்தையும் ஆசீரையும் பெற வந்திருக்கும் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இன்றைய நற்செய்தி எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதை தெளிவாக்குகிறது. இறை இயேசுவின் அன்பு, இரக்கம், பரிவு, மன்னிப்பு, அரவணைப்பு எனும் குணங்களோடு சமத்துவம், சகோதரத்துவம், நீதி, நேர்மை, தூய்மை எனும் மதிப்பீடுகளையும் கொண்டு வாழ அழைக்கிறது. இவ்வாறு வாழ்ந்து இறையாட்சியை அமைப்பவரே என் மக்கள் என அறுதியிட்டு கூறுகிறார் இறையேசு. இறையாட்சிக்காக மண்ணில் துன்புறுவோர் விண்ணில் இன்புறுவர் என்ற மாபெரும் உண்மையையும் நமக்கு அறிவுறுத்துகிறார். இந்த உலகம் ஒரு நாடக மேடை என்றார் ஷேக்ஸ்பியர். இதில் நன்றாக நடிப்பவர்கள் முதன்மையாகவும் மற்றவர் இணையாகவும் நடிக்கின்றனர். இதில் பணம் படைத்தோர், பதவியுடையோர், அதிகாரம் மிக்கோர் மற்றவரை அடக்கியாள்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் உண்மையை மிஞ்சும் அளவிற்கு போலியான ஆவணங்கள், பத்திரங்கள், கடவுச்சீட்டுகள், சான்றிதழ்கள், பணபரிவர்த்தனை செய்யும் அட்டைகள் அதிகமாகி சத்தியத்தை விலைகொடுத்து வாங்கி சந்தர்ப்பவாதிகளாக வாழ்கின்றனர். அழிவின் பாதையை நாடுகின்றனர். நமது மனமோ தீயவன் வளர்கிறான், கனிவானவனோ ஏமாளியாகிறான் என எண்ணுகிறது.

எல்லாம் அறிந்த இறைவனோ, நீ எங்கே உள்ளாய்? என வினவுகிறார். நாம் எங்கே உள்ளோம் என்பதை நாம் தான் நிரூபிக்க வேண்டும். எதைச் செய்தால் நன்மை, செய்யக் கூடாததைச் செய்தால் தீமை என்பதை உணர்ந்து நற்குணங்களை கொண்டு இறை இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்து மண்ணில் துன்புற்றாலும் விண்ணில் இன்புறுவோம் என்ற கடவுள் நம்பிக்கையோடு அவரின் மக்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவையின் தலைவர் திருத்தந்தைக்காக நாங்கள் மன்றாடுகிறோம். அவர் நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ்ந்து உலக மக்கள் அனைவரும் கடவுள் நம்பிக்கையுள்ள மக்களாக வாழ வேண்டி அவர் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் வெற்றிபெற செய்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தலைவரே இறைவா, எங்கள் திருஅவையின் கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் இருபால் துறவறத்தார்

அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். அன்று திருத்தூதர்கள் அறிவித்ததுபோல உடல் அழிந்தாலும் எங்கள் உள்ளம் நாளுக்கு நாள் புதுப்பிக்கப் பெறுகிறது என்பதுபோல திருஅவை புதுப்பொலிவு பெற உழைக்கும் அவர்களை நிறைவாக ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பமே குட்டி திருஅவை என அழைத்த இறைவா, எங்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நான் எங்கே உள்ளேன், எப்பாதையை நோக்கி பயணிக்கிறேன், போலி மாயச் சொல்லில் மயங்கி அழிவின் பாதையை நோக்கி பயணிக்காமல் இறை இயேசுவின் உண்மைப் பாதையை நோக்கி பயணிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. நிறை வாழ்வே இறைவா, பள்ளிமுடித்து கல்லூரிக்கும், கல்லூரி முடித்து வேலை வாய்ப்பிற்கும் தேடி நிற்கும் எம் பிள்ளைகளுக்காகவும் அனைத்து மாணவச் செல்வங்களுக்காகவும் மன்றாடுகிறோம். ஏற்ற நேரத்தில் தேவையானவற்றை கொடுத்து அவர்கள் மனங்குளிரவும், தவறான பாதையை தேர்ந்தெடுக்காமல், நல்வழியில் நடைபோடவும் முழுமையாக அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.06.2018 தூய பர்னபா திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறை யேசுவின் பிரியமானவர்களே, இன்றைய நாளை சிறப்பிக்கும் தூய பர்னபாஸ், சையரஸ் என்னும் தீவில் பிறந்தவர். இவருடைய பெற்றோர்கள், யூதர்கள் பெந்தகோஸ்தே விழாவுக்கு பின் இவர்கள் கிறிஸ்தவரானார். இவரது இயற்பெயர் ஜோசப். இவரை அப்போஸ்தலர்கள் இவர் பெயரை "பர்னபாஸ்" என்று மாற்றினார்கள். ("ஊக்குவிக்கும் பண்பு கொண்டவர்") என்னும் பொருளுக்கு ஏற்றவாறு இவர் புனித பவுல் நற்செய்தி அறிவிக்கச் சென்ற இடமெல்லாம் புனித பவுலுக்கு உற்ற துணையாக விளங்கினார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் மனந்திரும்பிய பவுல் எருசலேமுக்கு வந்தபோது சீடர்கள் அவர் மனந்திரும்பியவர் என ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இவ்வேளையில் பர்னபா அவருக்கு துணை நின்றுத் திருத்தூதர்களிடம் அழைத்துச் சென்றார். யூதாவிலும், எருசலேமிலும் எங்கும் கடும் பஞ்சம் உண்டாகவே, அந்தியோக்கியத் திருச்சபையின் பொருள் உதவிப் பெற்றுப் "பர்னபா" சவுல் மூலம் எருசலேமுக்கு அனுப்பி வைத்தனர். எருசலேமிலுள்ள புதுக் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க, தீர்மானித்தபோது புனித பர்னபாவின் ஆழமான விசுவாசம், நல்ல உள்ளம், தூய ஆவியின் வரம் பெற்றவர் என்பதால் எருசலேமுக்கு பர்னபாவை அனுப்பினர். புனித பவுல் நற்செய்தி அறிவிக்கச் சென்ற இடமெல்லாம் அவருக்கு கிடைத்த வசைமொழி துன்புறுத்தல்கள் கல்லெறியப்படும் போதெல்லாம் புனித பர்னபா புனித பவுலுக்கு உறுதுணையாக இருந்தார். புனித பவுல் சோர்ந்து

போகும் நேரங்களில் ஊக்கத்தோடு பணியாற்றுவதற்கான உற்சாச மூட்டும் வார்த்தைகளைத் தந்தவர் பர்னபா. தொடக்கத் திருச்சபையின் அருட்தந்தையும், நற்செய்தியாளருமான லூக்காவும் கூட, புனித பர்னபாவின் ஆர்வம் நிறைந்த பணிகளின் பொருட்டு இவரை திருத்தூ தர் என அழைத்தனர். ஆனால் இவர் 12 திருத்தூதர்களில் ஒருவர் அல்ல. சைப்ரஸ் தீவில் வேத விரோதிகள் இவரை 60ம் ஆண்டில் கல்லால் எறிந்து கொன்றார்கள். இவரின் வாழ்வைப் பின்பற்றி நாமும் நற்செய்தி பணியினை சிறப்பாக செய்யத் தேவையான வரமருள வேண்டி இத்திருப்பலியில பக்தியோடு மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் வல்லமையால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை நீர் விரும்பும் பாதையில் வழிநடத்திடவும், தங்களுக்கு ஏற்படும் துன்பங்கள் எதிர்ப்புகளை எதிர்க்கொள்ளும் ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நம்பிக்கையின் ஊற்றே இறைவா, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்துவர்களுக்கம் நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்கும் கடமையுண்டு என்பதை உணரவும், தாங்கள் பணிசெய்யும் பணித்தளங்கள், பங்குத்தளங்கள் போன்ற இடங்களில் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் பணிசெய்யும் ஆர்வத்தையும், நம்பிக்கையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிகாட்டும் நல்லாயனாம் இறைவா, உமது பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும் ஒருவரையொருவர் உண்மையான அன்போடு ஏற்றுக்கொண்டு நேசிக்கவும், மற்றவர்களின் துன்ப, துயர நேரங்களில் தாங்கிப்பிடிக்கவும், உற்சாகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் புனித பர்னபாவைப்போல ஆக்கத்திற்கு வழிகாட்ட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.06.2018 அருளாளர் பிரான்சிஸ் கெசியாந் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று திருஅவை மறைசாட்சிகளான அருளாளர் ஜோசப் கெசி என்று அன்போடு அழைக்கப்படும் ஜோசப் கெசியாந் மற்றும் அவரது நான்கு நண்பர்களை நினைவு கூறகின்றது. இவர்கள் அனைவரும் சலேசிய குடும்பத்தைச் சார்ந்த அதாவது "பொஸ்நன்" என்ற பகுதியில் செயல்பட்டுவரும் சலேசிய ஆரட்டரியின் மாணவர்கள். "போஸ்நனின் ஐவர்" என்று இந்த இளையோர் புகழ்பெற்று வாழ்ந்து கொண்டிருக்கையில் நாசிஸ் படையினரால் கைது செய்யப்பட்டனர். கடவுளிடமிருந்தும் திருச்சபைக்கு

எதிராகவும் திசைமாறி போய்க்கொண்டிருக்கும் இளையோரை மீட்டு மீண்டும் கிறிஸ்துவோடு அருள்வாழ்விற்கு அழைத்துவரும் மாபெரும் புதுமையை இந்த ஐவரின் பரிந்துரையில் நிகழ்ந்திருப்பதால் திருஅவை இந்த ஐவரையும் முத்திபேரு நிலைக்கு உயர்த்தியது. அதுமட்டுமல்ல, பள்ளி பருவ மாணவர்களின் முன்மாதிரிகளாகவும் இவர்கள் திகழ்கின்றனர். சலேசிய கல்விமுறையின் பிரதிநிதிகளாகவும் அதை தங்கள் வாழ்வில் நடைமுறையில் கடைபிடித்தவர்களாகவும் ஜோசப் கெசி மற்றும் 4 நண்பர்கள் திகழ்கின்றார்கள். ஒரு சிறந்த கல்விமுறைக்கு அதாவது சலேசிய கல்விமுறைக்கு இவர்களே உதாரணம்.

இன்றைய உலகில் தவறான பொய்யான மற்றும் மாயைகளை அதிகமாக தங்கள் வாழ்வில் விரும்பியோ விரும்பாமலோ அனுபவித்துவரும் அல்லது தவறான கொள்கைகளில் சிக்கிக் கொள்ளும் இன்றைய இளையோர்களை இனம்கண்டு கொண்டு அவர்களுக்கு நல்வழிகாட்டி அரணாக செயல்பட்டுவரும் அன்பர்களுக்கு பாதுகாவலர்களாகவும் பக்க பலம் தருபவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகவே நாமும் தேவைகளில் உள்ள இளையோரையும் அதுபோன்ற பிறரையும் இனம் கண்டு கொள்பவர்களாக நாம் மாற, ஆதரவின்றி அறியாமையில் வேறு பாதைகளை தேர்ந்தெடுக்கும் நம் சமகால இளைய உள்ளங்களை மீட்டு அன்போடும் பாசத்தோடும் இறை இயேசுவின் அருள்வாழ்விற்கும் தொன் போஸ்கோவின் ஆன்ம தாகம் நம்மில் இன்னும் வளர்த்துக்கொள்ளத் தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்ல மேய்ப்பனாம் எம் இறைவா, உமது மீட்பின் பணியைத் தொடர உம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரும் தூய ஆவியாரின் வல்லமையாலும், வழிநடத்துதலாலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையை தூய்மையின் பாதையில் வழிநடத்த வேண்டுமென்று தூய்மையாகவும், எளிமையாகவும் வாழ்ந்து காட்டிய புனித அலாசியுஸ் கொன்சாலோ வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. எளியவர்களின் செபத்தைக் கேட்பவரே, தீராத வியாதியாலும், மனவேதனை, மனஅழுத்தம், தீர்வு காணமுடியாத பிரச்சனைகள், ஏமாற்றங்கள் போன்ற துன்பங்களை அனுபவிப்பவர்கள்மீது மனமிரங்கி இவர்களின் கண்ணீரைத் துடைத்தருளும். இவர்கள் நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் செபிக்கும் செபங்களை தந்தைக்குரிய பாசத்தோடு செவிசாய்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்று கூறிய இறைவா, இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் இளைஞர்களும் இளம் பெண்களும் தங்களுடைய நேரத்தையும், பணத்தையும், அறிவு ஆற்றலையும்

தேவையற்ற பாதையில் தம்மையே அடிமையாக்காமல் தூய்மையே உருவான இறைவனின் துணையோடு தங்களின் மேன்மையான வாழ்வை வளமாக்கிக்கொள்ள வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.06.2018 தூய பதுவை அந்தோணியார் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அன்பு இறைமக்களே, இன்று திருஅவையானது கோடி அற்புதர் தூய அந்தோணியார் திருவிழாவைக் கொண்டாடுகிறது. தூய அந்தோணியார் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் அன்னை மரியாள் விண்ணேற்றம் அடைந்த நாளில் பிறந்தார். திருத்தொண்டர் ஒருவரின் பெயரான பெர்னதினாந்து என்ற பெயர் இவருக்கு திருமுழுக்கின்மூலம் கொடுக்கப்பட்டது. இந்தப் புனிதர் இளமையிலேயே சிலுவை அடையாளம் வரைந்து பேயை விரட்டியவர். நம் புனிதர் அசிசி பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து துறவியானார். ஒலிவாரெஸ் என்னும் மடத்தில் இருக்கும்போது நம் புனிதர் பெர்தினாந்து பெயரை நீக்கிவிட்டு "அந்தோணியார்" என்னும் பெயரை வைத்துக்கொண்டார். மோந்தே பவுலோ எனும் இடத்திற்கு அருகில் போர்னி நகரில் இருக்கும்போது அன்றைய திருப்பலியில் மறையுரை ஆற்றவேண்டிய குருவானவர் வராத காரணத்தால் நம் புனிதரை மறையுரை ஆற்ற ஆயர் அழைப்பு விடுத்தார்.

அதனை ஏற்றுக்கொண்டு முதல்முறை முறையுரை ஆற்றினார். அவர் எடுத்துக்கொண்ட இறைவார்த்தை: "கிறிஸ்து மரணம் மட்டும் கீழ்ப்படிந்தார்" என்ற புனித பவுலுடைய இறைவார்த்தைதான் அது. அன்றிலிருந்து மறையுரை ஆற்றுவதில் வல்லவராக திகழ்ந்தார். அதனால் இன்றும்கூட இவரது நாக்கு அழியாமல் அப்படியே இருக்கிறது. திவ்ய நற்கருணையில் இயேசு இருக்கிறார் என்பதை ஒரு பதிதக் கொள்கையைப் பின்பற்றியவனுக்கு கழுதை மூலம் நிரூபித்தார். திருத்தந்தை 9ஆம் கிரகோரி "வாக்குத் தத்தத்தின் பேழை" என்னும் பட்டத்தை நம் புனிதருக்கு வழங்கினார். 13.6.1231அன்று பதுவாவிலிருந்து சிறுதொலைவில் உள்ள அர்சில்லா என்ற இடத்தில் 36வயதில் இறந்தார். அந்தோணியார் புனிதரானதன் காரணம் அவரது தாழ்ச்சியாகும். இவர் இறந்த மறு ஆண்டே இவருக்கு புனிதர் பட்டம் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் கொடுத்தார். நாமும் நமது புனிதரைப் பின்பற்றி தாழ்ச்சி என்னும் வரம் வேண்டி இத்திருப்பலியில் வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அனைத்து நலன்களுக்கும் ஊற்றான இறைவா, உம்மால் தேர்வு செய்யப்பட்டு திருஅவையின் பணிகளை ஆற்றும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் தங்களது

சொல்லாலும் செயல்களாலும் உமது திருமகன் கிறிஸ்துவோடு இணைந்து நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆர்வத்துடன் ஆற்ற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. தோழமை உணர்வைத் தூண்டியெழுப்பும் இறைவா, புனித அந்தோணியார் உடலை வெறுத்து எளியவராய் வாழ்ந்து பல புதுமைகளைச் செய்து இந்த உலகில் எளிமையை நாடி அறவழியில் நடக்கும்படி முன்மாதிரி காட்டினதைப்போல் எங்களை ஆளும் தலைவர்களுக்கு எளிமையான வாழ்க்கையை கற்றுத்தர வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. வெற்றியின் நாயகனே இறைவா, எம் பள்ளி, கல்லூரி மாணவச் செல்வங்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். புதிய கல்வியாண்டில் அடியெடுத்துவைக்கும் அன்புச் செல்வங்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துத் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 17.06.2018 பொதுக்காலம் 11ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. எசே. 17: 22-24 II. 2கொரி: 5: 6-10 மாற்கு 4: 26-34

இறைஇயேசுவின் இனிய மக்களே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவரின் இறையாட்சியை சிந்திக்கின்றன, சிறப்பிக்கின்றன. முதல் வாசகத்தில் உலர்ந்த மரத்தையும் தழைக்க செய்வேன் என்று கேது மரத்தை நட்டு வானளாவ செய்து, அதன் கிளைகளில் அனைத்து வகை பறவைகளுக்கும் இல்லிடமாக வாழ செய்வேன் என்று தந்தையாகிய பரமபிதா கூறுவதாக இறைவாக்கினர் எசேக்கியேல் கூறுகிறார். இதன்மூலம் இறையாட்சிக்குள் அனைத்து மக்களும் புகுத்தப்படுவர் என்னும் நம்பிக்கை துளிர்விடுகிறது, உருவாகிறது. இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் நம்பிக்கையின் வாயிலாக இயேசுவோடு இயேசுவுக்குள் குடியிருக்கவே வற்புறுத்தப்படுகிறோம். நற்செய்தியாளர் மாற்கும் இறையாட்சி கடுகு விதைக்கு ஒப்பாகும் என்று கூறுகிறார். எல்லா விதைகளையும் விட சிறிதான கடுகு விதை நிலத்தில் விதைக்கப்படும்போது முளைத்து எல்லா செடிகளைவிட பெரிதாகி அதன் நிழலில் வானத்து பறவைகள் தங்கும் அளவுக்கு கிளைகள் விடும் என்கிறார்.

எல்லோரையும் தாயாகவும், தந்தையாகவும் சகோதர சகோதரியாகவும் ஏற்று அனைவரும் ஒரே குடும்பத்து பிள்ளைகள் என்ற உணர்வோடும், மனிதர் அனைவரும் கடவுளின் சாயல் என்று எங்கு மதிக்கப்படுகிறார்களோ மனித உரிமை மதிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இறையாட்சி இருக்கும். ஆண்டவர் நம்மை பூத்து குலுங்கி கனிகொடுக்கும் மரமாக உருவாக்க நினைக்கிறார். அவரின்பால் நாம் விசுவாசம் கொண்டு நன்றி செலுத்தி விசுவாசம் கொள்வோம். ஏனெனில் விசுவாசம் ஒரு கொடை என்று விவிலியம் கூறுவதை நம் உள்ளத்தில் ஏற்று இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, திருஅவையின் தலையான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் இறையாட்சியை உலகெங்கும் பரவ செய்ய திருஅவையின் மாண்பை உணர்ந்து அனைத்து மக்களையும் இறையாட்சியை அறியச் செய்வேன் என்ற உறுதியை பெற உம்மை மன்றாடுகிறோம்.
2. விசுவாசத்தின் திறவுகோலே இறைவா, அகில உலகின் எல்லா சமயங்களும், எல்லா இனத்தவரும் நீரே இறைவன் என்னும் பேருண்மையை அறிய செய்ய விசுவாசம் என்னும் கவசத்தை பலப்படுத்தி அதன் வாயிலாக உலகம் முழுவதும் உள்ள மக்கள் உம்மை பின்பற்ற வழி செய்ய வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் உறைவிடமே இறைவா, குடும்ப சூழ்நிலையாலும், உலகியல் கலாச்சாரத்தினாலும் கருத்தடை, கருச்சிதைவு என்று தீய வழிகளினால் தன் ஆரோக்கியத்தை இழந்து, பொலிவிழந்து பாதிக்கப்படும் பெண்களை காத்து, அவர்களை வழிநடத்தி உம் அருள்பெற்று வாழ உம்மை மன்றாடுகிறோம்.

## 23. 06.2018 தூய ஜோசப் க.:.பாஸோ திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

தூய ஜோசப் க.:.பாஸோ இத்தாலி நாட்டில் கஸ்தெல்நோவோ என்னும் கிராமத்தில் 1811ம் ஆண்டில் பிறந்தார். அவர் கியேரி என்ற இடத்தில் பள்ளிப் படிப்பையும், குருமடப் பயிற்சியையும் பெற்றார். அவரது குருப்பட்டத்திற்குப்பின் தூரின் மாநகரிலுள்ள "கன்வித்தோ எக்ளெசியாஸ்டிக்கோ" என்ற குருமடத்தில் அறநெறி இறையியல் படிப்பைப் படித்தார். அப்போது இளைஞர்களுக்கும் சிறையிலிருப்போருக்கும் மறைக் கல்வியைக் கற்றுக் கொடுத்து, அவர்களை நல்வழிப்படுத்தும் பணியை மேற்கொண்டார். பிறகு தான் படித்த "கன்வித்தோ" என்ற குருமடத்திற்கு அதிபரானார். அங்கே குருமட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அறநெறி இறையியலைக் கற்றுக்கொடுத்தார். புனித பிரான்சிஸ்கு சலேசியார் மற்றும் புனித அல்போன்ஸ் ஆகியோரின் போதனையால் அதிகம் கவரப்பட்டார். கடமையுணர்வு, சேவை மனப்பான்மை, செபவாழ்வு, இறைவனிடம் தன்னையே கையளிப்பது போன்ற விழுமியங்களால் தூண்டப்பெறுபவர் புனிதத்தை அடையலாம் என்று எடுத்துரைத்தார். சிறையிலிருப்போரைக் காணச்செல்லும்போது அங்கே மரணத்தண்டனைப் பெற்ற கைதிகளுக்கு கிறிஸ்துவ நம்பிக்கையையும் இறைவனின் இரக்கத்தையும் பற்றி எடுத்துச் சொல்லி அவர்களை உறுதிப்படுத்தினார்.

இவர் தொன்போஸ்கோவின் ஆன்ம குருவாக இருந்து, அவரது இளையோர் பணிக்கு பொருளுதவியும் ஆதரவையும் கொடுத்து வந்தார். இவர் தொன் போஸ்கோவிடம், இளையோருக்கு பணியாற்றுவதுதான்

இறைவன் அவருக்குக் கொடுக்கும் அழைப்பு என்பதை உறுதிப்படுத்தினார். "சிறைக்கைதிகளின் குருவும், இத்தாலிய குருக்களின் ஒளியாகவும்" திகழ்ந்த தந்தை க.:பாஸோ 1860ம் ஆண்டு ஜூன் 23ம் தேதி விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவருக்கு 1925ம் ஆண்டு அருளாளர் பட்டமும் 1947ம் ஆண்டு புனிதர் பட்டமும் கொடுத்து இவரை "சிறைக்கைதிகளின் பாதுகாவலர்" என்று அறிவித்தார். இச்சிந்தனைகளை மனதில் நிறுத்தி இறையருள் பெறவேண்டி இத் திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. **திருத்தந்தைக்காக:** இறைப்பணிக்காக தங்களையே கையளித்தவர்கள், குறிப்பாகத் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் இருபால் துறவறத்தார் அனைவரும் இறைவனது துணையால் தங்கள் அர்ப்பண வாழ்வில் உண்மையுள்ளவர்களாய் நிலைத்து வாழவும், அவரின் அருளைப்பெற்று மக்களுக்கு நிறைவான நம்பிக்கையான வாழ்வில் வழிநடத்த வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. **நாட்டு தலைவர்களுக்காக:** அன்பு இறைவா, உலக மக்களிடையே பகைமை உணர்வு, பழிவாங்கும் எண்ணம், கலவரம், கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் ஆகியவை நீங்கி, உலகிலும், நாட்டிலும் அமைதியும் சமாதானமும் நிலவ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. **முதியோருக்காக:** தனிமையினாலும், நோயினாலும் வாடிடும் வறியோர், முதியோர் அனைவருக்கும் மக்கள் மனிதநேயத்துடனும் அன்புடனும் ஆதரவளித்து, தங்களின் பெற்றோர், உற்றார் உறவினரை நல்லமுறையில் பேணிக்காக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.06.2018 திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. எசா. 49: 1-6 II. தி.ப. 13: 22-26 லூக். 1: 57-66,80

பாலைவனத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் பாழ்நிலத்தில் நெடுஞ்சாலை ஒன்றை சீராக்குங்கள். என்று எசாயா முன்னறிவித்தார் (லூக். 3:4-6). "இதோ என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார், அப்பொழுது நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார்" என மலாக்கிய 3: 1-5ல் முன்னறிவித்தார். நிறைவாக கபிரியேல் வானதூதர் செக்கரியாவிடம் நேரடியாகவே முன்னறிவித்தார் (லூக்.1: 5-23) இவ்வளவு பெருமைகளும் நம் புனிதர் திருமுழுக்கு யோவானுக்கே. இன்று அவரது பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாமும் அவரைப் பின்பற்றி இயேசுவின் பாதையில் நடப்போம்.

இன்றைய நற்செய்தி யோவானின் பிறப்பு பற்றிய செய்தியை நமக்கு கூறுகிறது. திருத்தூதர் பணி நூலில் பவுலும் கூறுகிறார். தாம் அளித்த வாக்குறுதியின்படி கடவுள் தாவீதுடைய வழிமரபிலிருந்து

இஸ்ரயேலுக்கு இயேசு என்னும் மீட்பரை தோன்றச் செய்தார். இயேசுவின் வருகைக்கு முன்பே யோவான் மனம் மாறி திருமுழுக்கு பெறுங்கள் என்று இஸ்ரயேல் மக்களுக்கு பறைசாற்றி வந்தார். வாழ்க்கை ஓட்டத்தை முடிக்கும் நிலையில் நான் யார் என நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பவர் நான் அல்ல, அவரது மிதியடிகளை அவிழ்க்கவும் எனக்கு தகுதியில்லை என்று கூறினார். எனவே நாமும் திருமுழுக்கு யோவானைப் போல் தாழ்ச்சியிலும், எளிமையிலும், வீரத்துடன், தீமைகளை எதிர்த்துப் போராடி இறை இயேசுவின் சீடர்களாய் மாறிட இத்திருப்பலியில் வேண்டுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

**பதில்:** ஆண்டவரே எம் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும்.

1. நீதியின் தந்தையே இறைவா, துணிவுடனும், நேர்மையுடனும், நீதி நெறியுடனும் போராடிய உமது தூதர் யோவானைப்போன்று உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் சிறப்பாக செயல்பட தூய திருமுழுக்கு யோவான் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தந்தையே இறைவா, நீர் எம்மீது கொண்டுள்ள அன்பினால் எம் வாலிப பிள்ளைகளை ஆசீர்வதியும். அவர்கள் தங்களின் ஆன்மாவை சீரழிக்கும் செயல்களில் ஈடுபடாது பிறரையும் மதித்து நல்ல முன்னேற்றப் பாதையில் வழிநடக்க துணைபுரியும்படி தூய யோவான் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. அமைதியின் தந்தையே இறைவா, இன்றைய சமுதாயத்தில் எங்கு பார்த்தாலும் சண்டை, சச்சரவுகள், கலவரங்கள், சாதிகொடுமைகள், விவசாய போராட்டங்கள் என சாத்தானின் கோரதாண்டவம் தலைவிரித்து ஆடும் இவ்வேளையில் இறைவா உம்மை நம்பி வாழும் எம்மை நீரே காத்தருள வேண்டி தூய திருமுழுக்கு யோவான் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 29.06.2018 தூய பேதுரு, பவுல் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. D.V.R. ராஜா

I. தி.ப. 12: 1-11 II. 2திமொ.4: 6-8,17-18 மத்.16: 13-19

புனித பேதுரு, மற்றும் பவுல் நமது திருச்சபையின் இரு தூண்கள் என்று மதிக்கப்படும், திருத்தூதர்கள் விழாவை, நமது திருஅவை கொண்டாடுகிறது. பேதுரு இயேசுவின் முதல் சீடரும் திருஅவையின் முதல் திருத்தந்தை விண்ணகத்தின் திறவுகோலைத் தன்னகத்தே கொண்டுள்ளவர். இந்த பாறையின்மீது என் திருச்சபையைக் கட்டுவேன் என்று இயேசு வாக்களித்தது இவர் வழியாய் நிறைவேறிற்று. எனினும் இவர் தன்னுயிரை சிலுவைக்கு அர்ப்பணித்து இறையாட்சி மனிதரானார். புனித பவுல், சவுலாக இருந்தபோது அநேக யூதர்களை கொடுமைப்படுத்தி வதைத்த, தமஸ்கு நகர் காட்சிக்கு பின் இயேசுவின் அன்பினை உணர்ந்து தமது வாழ்நாள் முழுவதும் இறையரசை பறைசாற்றுவதையே

உயிர் மூச்சாய் கொண்டு நல்ல போராட்டதை போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர். இவரது இறப்புப் பற்றிய துல்லியமான குறிப்புகள் இல்லை. எனினும் தலை கொய்தோ புனித பேதுருவைப்போல் இறந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இன்றைய வாசக நற்செய்தியும், இவர்கள் சந்தித்தத் துன்பங்கள் இறைத்தூதர் காப்பாற்றியது சாட்சிப் பகர்ந்தது ஆகியவற்றை எண்பிக்கிறது. தலைமை பண்பிற்கும் நிர்வாகத்திற்கும் புனித பேதுருவும் நற்செய்தி பணியின் அறிவிப்பதின் அடையாளமாய் புனித பவுல் விளங்குவதுபோல் இவ்விருவரையும் நம் வாழ்வில் உதாரணமாகக் கொண்டு இறையன்பிலும், இறைப்பணியிலும் இறையுறவிலும் நிலைத்து இறைவனுக்கு சாட்சி பகர இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. **திருத்தந்தைக்காக:** தூய பேதுருவின் வழி தொடராய் விளங்கும் எமது திருத்தந்தையின் ஆன்ம சரீர நலன்களை இறைவன் பாதுகாத்து திருஅவையை திறம்பட நிர்வகிக்கும் ஆற்றலையளித்து, திருஅவையை பாதுகாக்கவும், எல்லா சவால்களையும் சந்திக்கும் வலிமையளித்து தொடர்ந்து இறைவன் பாதுகாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. **பங்கு மக்களுக்காக:** அன்பு தந்தையே இறைவா, பங்கு மக்கள் யாவரும் இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டு மற்றவர்களிடத்தில் பகிர்ந்து, இறைவனோடு ஒன்றித்து வாழ தாழ்ச்சி, விட்டுக்கொடுத்தல், சமாதானம் இவைகளை அனுதினம் கடைப்பிடித்து வாழும் மனப்பக்குவத்தை இறைவன் அருளி, நோய்கள், கடன்சுமை, பணம் பற்றாக்குறை இவைகளை நீக்கி உமது இறையருளை எம் பங்கிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. **நாட்டுத்தலைவர்களுக்காக:** தமத்திருத்துவ தேவனாகிய இறைவா, புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தலைவர்கள் கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு பணம் ஒன்றையே குறிக்கோளாக கொள்ளாமல் மக்களின் நலன் கருதி உழைக்கவும், நல்ல கொள்கையோடு, சிறந்த திட்டங்கள் வழியாக, சிறந்த நிர்வாக திறனோடு, சிறந்ததோர் ஆட்சி மூலம் மக்கள் நிறைவான வாழ்வை அனுபவிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. **மாணவர்களுக்காக:** நித்தியத்தின் தந்தையே இறைவா, எம் சமூகத்திலுள்ள மாணவச் செல்வங்கள் எழுதியுள்ள தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று அவர்கள் எண்ணியிருக்கும் இலக்கை அடைந்து வாழ்வில் வெற்றிக்கான சிறந்த எதிர்காலம் அமைய அதன் மூலம் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்வழியில் நடத்திடத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.று

## பள்ளிகள் திறப்பு - பள்ளியில் பொது செபவழிபாடு

திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் பிரியமான மாணவ மாணவிகளே, மதிப்பிற்குரிய இருபால் ஆசிரியப் பெருமக்களே, இன்று நாம் அனைவரும் இப்புதிய கல்வியாண்டின் தொடக்க நாளில் இறைவன் திருமுன் ஒன்றாய் கூடியுள்ளோம். இந்நேரத்தில், சர்வ வல்லமையுள்ள இறைவன் கடந்த ஆண்டு முழுவதும் நமக்குத் தந்த நல்ல உடல்நலம், கல்வி அறிவு, திறமைகள், பாதுகாப்பு, பொருளாதார உதவிகள், தேர்வில் வெற்றி போன்ற அனைத்து நன்மையான செயல்களுக்கும் கோடான கோடி நன்றி செலுத்துவோம். மேலும் இறைவன் நமக்குத்தந்துள்ள இப்புதிய கல்வி ஆண்டினையும் இறைவனின் பாதத்தில் சமர்ப்பித்து இவ்வாண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்றும், வல்லமையான கரங்களினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் இன்றைய செபவழிபாட்டில் நம்மையே தாழ்த்தி வரம் கேட்டு ஒருமனதாய் செபிப்போம்.

**பாடல்:** ஓ பரிசுத்த ஆவியே...

**விவிலிய வாசகம்:** "என் காலடிக்கு உம் வார்த்தையே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே" என்று திருப்பாடல்களில் எழுதியதுபோல நம் வாழ்க்கை ஒளிதரும். இறைவன் நமக்கு தரும் செய்தியை கேட்டு தியானிப்போம். (நீதிமொழி 3: 1-12)

**செபவழிபாடு:** (தேவையான பொருட்கள்) குத்துவிளக்கு, சிறியசெடி (தொட்டியில்) மலர்மொட்டுக்கள், புதிய பாடப்புத்தகங்கள், புதிய சீருடை, கல்வி நிலையத்தின் பாதுகாவலர் படம் அல்லது சுருபம்

இறைவா, எனது நாளை நான் தொடங்கும்முன் உமது தொடுதலையும், உம்மோடு உறவாடவும் வந்துள்ளேன் என்று தாகூர் தனது பாடலில் இறைவனுடைய முக்கியத்தை கூறுகிறார். நம்முடைய ஒவ்வொரு நாளும் இறைவனின் உதவியோடு மட்டுமே ஆரம்பிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த பேரருள் ஜோதியாம் இறைவனை நம்மிடையே அழைக்க, ஒளியாம் இறைவனை குத்துவிளக்கினை ஏற்றி இறைப்பிரசன்னத்தை உணர்வோம். (தலைமை ஆசிரியர் குத்து விளக்கினை ஏற்றலாம்)

**ஒளி:** ஒளியாம் இறைவா, இக்கல்வி ஆண்டினை தொடங்க இருக்கும் எங்கள் அனைவரின் உள்ளத்திலும் மனதிலும் இருக்கும் அறியாமை, இயலாமை, கல்லாமை போன்ற இருளை அகற்றி, உமது தெய்வீக ஒளியினால் எங்களைப் புதுப்பித்து, புதுப்பொலிவுடன் திகழவும், படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்றும் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றும் திரிகளாக இருக்க வேண்டுமென்றும், உம்முடைய ஒளி எங்களை என்றும் வழிநடத்த வேண்டுமென்று இறைவா இந்த ஒளியை (குத்துவிளக்கை) உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**சிறிய செடி (தொட்டியில்):** இயற்கையின் தலைவரே எம் இறைவா,

இச்சிறிய செடியானது நாளடைவில் வளர்ந்து பெரிய மரமாகி பல வழிகளில் அனைவருக்கும் பலன்தருவதுபோல நாங்களும் எங்கள் பள்ளியெனும் நிலத்திலே நல்ல பலன்தரும் மரங்களைப்போல நல்ல மாணவ மாணவிகளாக கற்றுத்தேர்ந்து எங்கள் பெற்றோர்களுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக எம்மை உருவாக்க வேண்டுமென்று செபித்து இந்தச் சிறிய செடியை உமக்கு காணிக்கையாக தருகிறோம் ஏற்றருளும் இறைவா.

**மலர் மொட்டுக்கள்:** அன்பே உருவான இறைவா, வளர்ந்து வருகின்ற அழகிய பூக்களின் மொட்டுக்களைப்போல இவ்வாண்டு இப்பள்ளியில் புதிதாக சேர்ந்திருக்கும் புதிய மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியப் பெருமக்களையும் வரவேற்கிறோம். இவர்களுக்கு உமது ஆசீர் நிறைவாக கிடைக்கவும், இவர்கள் தங்களிடமுள்ள எல்லா திறமைகளையும், அறிவாற்றல்களையும் பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும் தங்களை தாராளமாக கையளிக்கவும், பள்ளியின் புதிய சூழ்நிலை விதிமுறைகள் இவைகளை ஏற்று, அனைவரோடும்,மகிழ்வோடும், அன்போடும் இணைந்து செயல்பட வேண்டி வரம் கேட்டு இந்த மலர் மொட்டுக்களை உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**புதிய நோட்டு புத்தகம்:** ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இந்த கல்வியாண்டில் எங்களுக்கு கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி நாங்கள் படிக்கப்போகும் எல்லா ளுரடிதநஉவ பாடங்களையும் ஆசிரியர்கள் நடத்தும்போது தெளிவாகவும், எளிமையாகப் புரிந்துக்கொள்ளும் ஞானத்தையும், படித்ததை மனதில் வைத்துக்கொள்ளும் திறனும், போட்டிகளிலும், எங்களுக்கு கொடுக்கப்படும் சவால்களிலும் எங்களுடைய திறமைகளை நல்லவைகளுக்காக பயன்படுத்தவும், வரவிருக்கும் அரசாங்கத் தேர்வில் நல்லமதிப்பெண்களுடன் வெற்றிப்பெற வேண்டுமென்றும் செபித்து இந்த நோட்டு புத்தகங்களை அர்ப்பணிக்கின்றோம்.

**புதிய சீருடை:** தூய்மையின் இருப்பிடமே இறைவா,பள்ளிகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை தவிர்க்கவும், அனைவரும் சமம் என்பதை உணர்த்தும் இந்த சீருடையை நாங்கள் அணியும் ஆடைகளில் மட்டுமல்லாமல் எங்களுடைய பழக்க வழக்கங்கள், உரையாடல்கள், நட்பில் ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், சாதி, மதம், இனம், மொழி போன்ற வைகளில் வேற்றுமை பாராட்டாமல் இறைவன்முன் எல்லா குழந்தைகளும் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை எங்களுக்குள் வளர்த்துக் கொள்ளவும் அனைவருடனும் சகோதர உணர்வோடும், நட்போடும் பழகும் நல்ல மனதைத்தர வரம் கேட்டு இந்த சீருடைகளை உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**பள்ளி பாதுகாவலரின் படம் (அல்லது) சுரூபம்:** நல்லாயனாம் இறைவா, இப்பள்ளியினை திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் பள்ளி தலைமை

ஆசிரியரை உமது பாதத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். தூய ஆவியின் வரங்களால் இவரை நிரப்பியருளும். உமது கிருபையும், இரக்கமும் எங்கள் தலைமை ஆசிரியரைச் சூழ்ந்து கொள்ளட்டும். இவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளியையும், குழந்தைகளையும் திறம்பட நடத்தவும், எதிர்பாராமல் வரும் பிரச்சனைகளை சுமூகமாக தீர்க்கும் திறமையும் பெற்றோர்கள், ஆசிரியர்களிடமிருந்து ஒத்துழைப்பும், ஆலோசனையும் கிடைக்கும்படியும் செய்தருளும். மேலும் எங்கள் தலைமை ஆசிரியரோடு அனைத்து ஆசிரியர்களும் இணைந்து இப்பள்ளியின் பாதுகாவலரான---------------உதவியோடும் முன்மாதிரியாக இருந்து அனைத்து பள்ளிகளுக்கும் எடுத்துக்காட்டான பள்ளியாய் உருவாக்கும் வரத்தைத் தர வேண்டுமென்று செபித்து இந்த சுரூபத்தை அர்ப்பணிக்கிறோம்.

**முடிவுரை:** அன்பு மாணவ மாணவிகளே, தற்போது செபவழிபாடு நிறைவுற்றது. இறைவன் நம்மை அன்பு செய்கிறார், நம்மைப்பாதுகாக்கிறார், என்றும் நம்முடன் இருப்பார் என்ற எண்ணங்களோடு பரலோகத்தில் இருக்கிற... செபத்தை ஒருவர் மற்றவரின் கரங்களைப் பிடித்து செபித்துக் கொண்டு நாம் நமது வகுப்பறைகளுக்குச் செல்வோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## இல்லங்கள் தோறும் திரு இருதயம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

ஜூன் மாதம் இயேசுவின் திரு இருதயத்தைத் தியானிக்க நமக்கு அளிக்கப்பட்ட அற்புதமான மாதம். இதயம்... மனித உறுப்புகளின் மையமானது, உறுப்பு அனைத்துக்கும் வேண்டிய இரத்தத்தை சுத்திகரித்து சூழலவிடுவது, இந்த இதயம் இரண்டு நிமிடங்கள் இயங்காதுபோனால் மனிதன் இறந்துவிடுவான். மனிதனது உயிர் வாழ்விற்கு இன்றியமையாதது இதயம். அவன் உறுப்புக்களின் அனைத்துக்கும் துடிப்பும் இயக்கமும் தருவது இதயம், மனிதனது உறவு வாழ்வுக்கும், அறநெறி வாழ்வுக்கும், மனிதநேய செயல்களுக்கும் மையமாக இருப்பதும் இதயம்தான். அது அன்பின் அடையாளம். வாழ்வின் குறியீடு. அன்பின் பிறப்பிடம். ஈகையில் அமுதசுரபி. உறவுகளின் சங்கமம். ஊக்கத்தின் கிரியா ஊக்கி. கருணையின் வற்றாத நதி. இந்த இதயம் துடிப்பது அன்பு செய்யவும், அன்பினைப் பெறவுமே. நமது மூளை அறிவுத்திறன் கொண்டது. நன்மை தீமை என்று அறிவது. ஆனால் மனித சிந்தனைகள், அறிவியலின் ஆற்றல்கள் அனைத்தையும் வென்று உயர்ந்திட அவசியம் வேண்டும். ஓர் இதயம், வெளித்தோற்றம் காட்டும் கண்களுக்கு வெளிப்படாத உள்ளூறுப்பாம் இதயத்தில் புலர்ந்து விரிந்து மலர்வதே அன்பு. அது ஆணவம் அகங்காரம், திமிர் அனைத்தையும் உடைத்தெறியும். ஆம், அன்பு கொண்ட நெஞ்சம் ஆண்டவர் தங்கும் கோயில். மானிடத்தின் அன்பு பரிசு. மனிதனில் பகிர்வின் உயர்வையும், அவளைக்காப்பதும், வளர்ப்பதும்

அன்பே. அன்பு அது இயல்பானது. இயற்கையானது இன்பமானது, அது மனித இதயத்திற்கு உரித்தானது. ஆனால் இயேசுவின் இதயம், அன்பின் உதயம், அகிலத்தையும் ஒளிர்விக்கும், அகில உலக இருளை ஓட்டிடும் ஆற்றல் மிக்கக் கதிரவன். அனைத்து உயிர்களையும் தொட்டு எழுப்பி, இயற்கையைச் சிரிக்கவைத்து, ஆனந்த கூத்தாடும் தென்றலையும் அக்களிப்பால் ஓங்கிவரும் அலைகளையும் இயக்கிவைக்கும் இணையில்லா சக்தி. இச்சக்திமிகு இயேசுவின் இதயம், அமைதியின் உறைவிடம். ஆறுதலின் பிறப்பிடம் அச்சத்தை அகலவைத்து, ஆற்றலை அகத்தில் வைக்கும் தீபம், அதில் சுரக்கும் அன்பு அனைவருக்கும் பகிரப்படும் சொத்து, உலகோர் அனைவரும் பருகுவதற்கும் ஊர் நடுவே பொங்கி எழும் ஊற்று, இயேசு கூறுவார். தாகம் இருக்கும் யாவரும் தெளிந்த நீரோடையில் தாகம் தீர்க்கிறார்கள். "யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும்... அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்தோடும்" (யோவா. 7:37-38), ஆம்... மக்களின் தாகம் தீர்ப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அவருக்கு. சாந்தமுடன் எளியோரைச் சந்தித்து, சமாரியப் பெண்ணுடன் சமத்துவம் பேசி, நயீன் நகரத்து விதவைக்கு இறங்கி, அவள் மகனுக்கு உயிர் நல்கிய உன்னதரே, தொழுகைக் கூடத் தலைவர் மகளுக்கு எழுந்திடு என உயிர்கொடுத்த இதயமே, காணாமல்போன ஆடு, காசு, மகன் இவற்றின் உவமைகளால் நீர் எம்பால் கொண்ட இதய அன்பை நிறைவாய்த் தெளிவாக்கினாய். பிறரை மன்னித்து, குணப்படுத்துதலைப் பெரும் அன்பின் வெளிப்பாடாய் பாருக்கு உணர்த்தினாய்.

பாவியானப் பெண் தன் கண்ணீரால் உம் பாதங்களைக் கழுவிய செயல்கண்டு கனிவோடு அவளை மன்னித்தாய் (லூக் 2324). இதய அன்பின் வெளிப்பாடாய் உதிர்த்தாய். ஆம், இயேசுவின் இதயத்து அன்பிற்கு அளவில்லை. கனிவும் கரிசனையும் அதற்கு உண்டு. அவர்தாமே, நெஞ்சத்து அன்பினைப் பகிர்ந்தார். அனைவருக்கும் இரத்தமும் நீரும் தந்தார். இரத்தத்தால் மீட்டார். குத்தி திறக்கப்பட்ட தம் விலாவிலிருந்து குருதியும், நீரும் ஒழுகி ஓடி வையகம் உய்வதற்கே வாரி வழங்கினார். இத்தகு உயரிய இயேசுவின் திரு இருதயம், ஆராதனைக்கும், வணக்கத்திற்கும், புகழ்ச்சிக்கும் உரிய ஒரு அருளடையாளம். மூவொரு இறைவனின் கருணை இரக்கப் பெருக்கத்தின் சாயல். இதன் அடிப்படையில் தோன்றியதுதான் திரு இருதய பக்தி. இந்த திரு இருதய பக்தியானது, கி.பி. 1050களில் புனித அன்சலம் மற்றும் புனித பெர்னார்டு காலத்தில் தோன்றி, இறைவல்லுநர்கள் புனித பெனவெந்தூர், புனித பெரிய செத்தூர்த்து காலத்தில் பிரபலமாகி புனித பெரிய ஆல்பெர்ட், புனித சிரியாகந்தான், புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் மற்றும் புனித ஆசீர்வாதப்பர் சபையினரால் இப்பக்தி உலகெங்கும் பரவியது. கி.பி. 1673-1675ல் புனித மார்கரேட் மேரி அலகோக்கின் திரு இருதய காட்சிகளில் இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்க அறிவுறுத்தினார்.

திருத்தந்தையர்கள் 9ம் பத்திநாதர், 13ம் சிங்கராயர் 11ம் பத்திநாதர் ஆகியோர் இப்பக்தி முயற்சியை மிகவும் ஊக்குவித்தனர். கி.பி. 1856ல் திருத்தந்தை 9ம் பத்திநாதர் இப்பக்தியை ஊக்குவித்ததோடு, இப்பக்தியைத் தனி கத்தோலிக்க குடும்பம், குழுக்கள், துறவற சபையினர் அனைவரையும் இயேசுவின் திருஇருதயத்திற்குத் தங்களை அர்ப்பணிக்க அறிவுறுத்தினார். கி.பி. 1899ல் திருத்தந்தை 13ம் சிங்கராயர் இயேசுவின் திரு இருதயத்திற்குப் பரிகாரம் செய்வதன் அவசியத்தைக் குறித்து எழுதிய திருமடலின் வழியாய் முதல் வெள்ளிக்கிழமைப் பக்தி பரவலாயிற்று. இத்தகு உயரிய இயேசுவின் இதய பக்தி என்பது இறைமகன் இயேசுவின் மானிட அன்பையும், தெய்வீக அன்பையும் சிறப்பிப்பதாகும். இந்த பக்தி நம் மனதில் மலரும்போது நான் நம் இருதயத்திலும், அதே மானிட அன்பும், தெய்வீக அன்பும் மலரும் இவ்விருதய பக்தி. இவ்வுலக வாழ்வில் ஆசீர்பொழியும் ஊற்றாகவும், அபரிதமான அருட்கொடைகளைக் கொடுக்கக் கூடியதாகவும், மறுமையில் நித்திய வாழ்விற்குத் தொடக்கமாகவும் இருக்கிறது என்பதை நாம் மிகத் தெளிவாக அறிந்துக் கொள்ளலாம். இப்பக்தி முயற்சியானது, இவ்வுலகின் தீய நாட்டங்களை விலக்கவும், அன்பு, பரிவு, இரக்கம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், மன்னிப்பு என்னும் திரு இருதயத்திற்கு விருப்பமான குணங்களைக் கடை பிடிக்கவும் வழிவகுக்கிறது.

கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாகிய நாம், இத்திரு இருதய பக்தியை நிறைவாக உணர நம் இல்லங்களில் திருஇருதய அரசாட்சியை நிறுவச் செய்து, அவரை அன்பு செய்யவும், ஆராதிக்கவும், அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். இல்லங்களில் திரு இருதய பக்தியை, அரசாட்சியை நிறுவிட முதலில் நம்மைத் தயாரிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கோயிலுக்குச் சென்று, ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று, திருப்பலியில் பங்குகொண்டு நற்கருணை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டு இறையாசீரைப் பெற்றவர்களாய் இல்லம் அல்லது சுரூபத்தைப் பொருத்தி வைக்க ஆயத்தம் செய்ய வேண்டும். பங்கு குருவானவரைக் கொண்டு திருஇருதய ஆட்சியை நிறுவும் புனித சடங்கை நிறைவேற்ற வேண்டும். இதன்மூலம் நமது இல்லத்தை இயேசுவின் திரு இதயத்திற்குச் சொந்தமாக்கி, அன்பின் இருப்பிடமாக்குவோம். அவரே நமது குடும்பத்தின் அரசராகவும், தலைவராகவும் உற்ற நண்பராகவும், இருந்து நம்மைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் மன்றாடுவோம். குடும்பத்தார் அனைவரும் இயேசுவின் திரு இருதயத்திற்கும் திருச்சபைக்கும் கீழ்ப்படிந்து விசுவாசத்தில் உறுதிபூண்டவர்களாய், நம்பிக்கையில் வளர்ந்து, இறையன்பிலும் பிறரன்பிலும் நிலைத்திருக்க அருள்வரம் வேண்டுவோம். அவரை நம் இல்லத்தில் வரவேற்று ஆராதிப்போம். எதிரியையும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்திற்காய் இறைஞ்சுவோம். வாக்களிப்போம், அவரின் மேலான அரசுரிமை நம் ஆன்மாக்களை ஆட்கொள்ளவும், அவரின் திரு இருதயத்திற்கேற்ப வாழவும் உறுதியெடுப்போம்.

தொடர்ந்து குடும்பத்தினர் அனைவரும் இயேசுவின் திருஇருதயப் படத்தின்முன் தினமும் ஒன்றுகூடி செபிக்க வேண்டும். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பாக வழிபட வேண்டும். திருப்பலியில் பங்கு கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருடமும் நம் இல்லத்தில் திரு இருதய அரசாட்சியை நிறுவிய நாளினைப் புதுப்பிக்க வேண்டும். இதன்மூலம் நம்மை நாமே திருஇருதய பக்தியில் உற்சாகப்படுத்திக் கொள்ளவேண்டும். இயேசுவின் திரு இருதய அரசாட்சியை இல்லங்களில் நிறுவினால் மட்டும் போதாது. நாம் அளித்த வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். நம் சகோதரனைப் புரிந்துக்கொண்டு அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும். துயரத்தில் இருப்போரின் துயர் துடைக்க வேண்டும். அவர்களின் சோகங்கள், சோர்வுகளை தவிர்க்க வேண்டும். அழிவு சக்திகளை அழித்து ஆக்க சக்தியால் அவணியை நிரப்ப வேண்டும்.

யார் இருக்கிறார்கள் என்ற கேள்விக்கு சகோதரன் நானிருக்கிறேன் என்றே நேசக்கரம் நீட்டி, வேதனைக்கு ஆறுதல், நோய்க்கு மருந்தாய் அன்பு என்னும் வசனத்தை அகிலத்தில் வளர்க்க வேண்டும். இன்று நாம் வாழும் காலக்கட்டத்தில் இயேசுவின் திரு இருதய பக்திப் பழக்கம் பரவலாக இப்பினும், இயேசுவின் திரு இருதயத்திற்கு மிகவும் வருத்தம் தரும் படியான மனித நேயமற்ற வன்முறை செயல்கள் மிகுந்துள்ளன. இவைகள் அழிய வேண்டும். இதற்கு ஒவ்வொரு குடும்பமும் தங்களைக் கையளிக்க வேண்டும். அன்பு நெஞ்சங்களே, "இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவே, என் இதயத்தை உமது இதயத்தைப்போல் மாற்றியருளும்" என்று ஒவ்வொருவரும் மன்றாடுவோம். இல்லங்கள் மூலமாக இத்திரு இருதய பக்தியை அவணியில் உயர்த்துவோம், நிலைநிறுத்துவோம்.

## கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் - வாழும் புனிதம்

திரு. ஜான் அலெக்ஸ்

கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தத்தின் பெருவிழாவை ஆண்டுதோறும் கொண்டாடுகின்றோம். இது யாருடைய உடல்? யாருடைய இரத்தம்? இந்த உடலும் இரத்தமும் சிலுவையில் மரித்த இயேசுவினுடையதா? கலிலேயாவில் நடந்து, பேசி, கற்பித்த உடல்தானா இது? உண்மையில் அதுவல்ல. மாறாக நாம் கொண்டாடும் உடல் உயிர்த்த இயேசுவின் உடலாகும். திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் அந்த உடலில் உறுப்பினர்களாகி அவற்றுள் அங்கம் வகிக்கின்றோம். நம்மில் சிலர் அவ்வுடலில் ஒட்டுமொத்த வாழ்வில் பங்களிப்பவர்களாகவும் உள்ளார்கள். ஒருசிலர் அதிலிருந்து விலகிச் சென்றவர்களாகவும், வேறுசிலர் தங்களை பாதுகாக்க ஊட்டம் பெற வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

**உயிர்த்தெழுந்த உடல்:** நாம் நற்கருணை வாங்கும்போது குருவானவர், "கிறிஸ்துவின் உடல்" என்பார். அதற்கு நாம் விசுவாசத்தோடு ஒப்புக்கொள்வதன் பதில் "ஆமென்" என்கிறோம். அவ்வாறு சொல்லும் போது, நாம் பெற்றுக்கொள்ளும் திருவுடல், இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல் என்றும் கலந்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் அதில் ஒரு பகுதி

உண்டு என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் நாம் ஒருவரையொருவர் உண்ணுகிறோம் என்பதே இதில் மறைந்திருக்கும் பேருண்மை என்று இறையியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். இது நமக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருக்குமானால் அன்றும் கூட இயேசு "என் உடலை உண்ணவும், இரத்தத்தை பருகவும்..." என்று சொல்லும்போது இயேசுவின் சீடர்கள் உட்பட யூதர்களும் அதிர்ச்சியடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**உட்கொள்வது என்றால் பகிர்ந்து கொள்வது:** நாம் கிறிஸ்துவின் உடலை "உட்கொள்"வதோடு இல்லாமல் அதை "பகிர்ந்து" கொள்கிறோம் என்று சொல்வதே சிறந்ததாகும். இதையே பவுலடிகளார் நமக்கு எடுத்துரைக்கிறார். "கடவுளைப்போற்றித்திருவிருந்துக்கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா, அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா" இங்கே "உடல்" என்பது உயிர்த்த இயேசுவும் அவரது சீடர்கள் மற்றும் இறைமக்களை குறிக்கின்றது. மேலும் பவுலடிகளார், அப்பம் ஒன்று பிடப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்து திருவிருந்தாக மாறுவதை குறிக்கும் விதத்தில், "அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்கு கொள்கிறோம்" என்று ஒப்பிட்டு காட்டுகிறார். ஆகவே "திருவிருந்து" அல்லது பகிர்தல் என்பது இயேசுவோடு மட்டுமல்ல, நம்மைச் சுற்றியிருக்கும் அனைவருடனும்தான். அதற்காகத்தான் திருவிருந்திற்கு முன் கடவுள் கற்பித்த செபத்தை சொல்லி பிறருக்கெதிராக நாம் செய்த தீமைகளுக்கு மன்னிப்பை வேண்டுகிறோம். அதுமட்டுமல்ல உண்மையான மனதுயர் மற்றும் ஒப்புரவு பெற ஒருவருக்கொருவர் அமைதியை பகிர்ந்து கொள்வதன் மூலம் முழுமையான பங்களிப்பை உறுதிசெய்துகொள்ள வாய்ப்பு தரப்படுகிறது.

**வாழ்வின் மையமும் ஊற்றும்:** இரண்டாம் வத்திக்கான் சங்கம், "இயேசுவினுடைய திருவுடல் திருஇரத்தம் கிறிஸ்து வாழ்வின் மையமாகவும் ஊற்றாகவும் இருக்கின்றன" என்று நமக்கு கற்பிக்கிறது. நாம் மீட்பு பெறவே இயேசு தம்மையே பகிர்ந்து கொண்டார். இப்பேருண்மையைத்தான் "வாழ்வு தரும் உணவு நானே" என்றும் "என்னிடம் நம்பிக்கைக் கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" என்றும் சொல்வதை நாம் பார்க்கின்றோம்.

**நம்பிக்கையின் அடையாளம்:** நற்கருணை-அதாவது கிறிஸ்துவின் திருவுடல் கத்தோலிக்கத் திருஅவையின் மையம். அதுவே உயிரூற்றாகவும் இருக்கின்றது. மேலும் திருஅவையின் நம்பிக்கை கோட்பாடும் நற்கருணையே. "நற்கருணையே எல்லா அருளடையாளங்களின் நோக்கமும் நிறைவுமாக அமைகிறது" என்று திருவழிபாடு எண்.7 நம்பிக்கையின் மறைபொருள் எண் 38 நமக்கு விளக்குகிறது. திருப்பலியின் போது நாம் அறிக்கையிடும் நம்பிக்கை அறிக்கையானது நமது ஆழமான இறை நம்பிக்கையை குறிக்கின்றது. உண்மையாகவே அப்ப இரச வடிவில்

உருமாறுகின்ற இறைவனை நாம் நம்புகிறோம் என்பதை வெளிப்படையாக நாம் அறிக்கையிடுகிறோம் என்பது பொருள். திருப்பலியின் வழியாக இயேசுவை நாம் நிறைவாய் பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்ல அந்த பகிர்தலின்போது இறைவனின் அளவில்லா இரக்கத்தையும் பெற்றுக் கொள்கிறோம் என்பதே உண்மை.

**இறைவனது பிரசன்னம்:** நற்கருணை என்பது இயேசுவின் திருத்தோற்றத்தை பிரதிபலிக்கின்றது. உலகம் முடியும்வரை நம்மோடு இருப்பேன் என்றவரின் உண்மையான உயிருள்ள வார்த்தைகள் இந்த அப்பத்தில் முழுமை பெறுகின்றன. விண்ணிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள வாழ்வுதரும் உணவு என்பதை நாம் உணர்ந்து வாழ நற்கருணையில் இருக்கும் இறையிருப்புதான் நம்முடைய கிறிஸ்துவ வாழ்வின் அச்சாரமாகிறது. இறைவனின் பெருமைகளை நற்கருணை என்ற சொல் நமக்கு உணர்த்துவது போல இறைவனின் அளவுகடந்த கருணையின் வெளிப்பாடே தெய்வீக உணவு என்பது, "நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன், உன்னைவிட்டு விலகமாட்டேன்..." (எபி.13:5) என்று வாக்கு மாறா தேவன் கூறிய இறைவார்த்தை "நற்கருணை" என்ற தேவதிரவிய அனுமானத்தின் வழியே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் உறவின் வெளிப்பாடாகும். ஒவ்வொரு திருப்பலியிலும் அப்பம் பிட்டுத்தரப்படுகிறது. இந்த "அப்பம் பிடுதல்" என்ற அடையாளம் ஆயிரமாயிரம் அர்த்தங்களை உள்ளடக்கியதொன்றாகும்.

**இதிலிருந்து பெற்று உண்ணுங்கள் :** அன்பின் ஊற்றாகிய இறைவன் திவ்விய நற்கருணை வழியாக தன் அன்பின் முழுப்பரிமானத்தையும் எடுத்துக் காட்டுகிறார். "அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள். இது உங்களுக்காக கையளிக்கப்படும் என் உடல்" என்று சொல்லுகின்ற நேரத்தில் இயேசு தன் வாழ்வின் சக்திகள் அனைத்தையும் தாரை வார்க்கிறார். அவர் மயமாக நம்மை உருமாற்றுகிறார். நமது உடல், உணர்வுகள், உயிர் ஆகிய அத்தனையும் ஊடுருவி நிற்கிறார், கிறிஸ்து அவனாக மாற்றுகிறார். எனவே தினமும் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை உட்கொள்ளும் ஒருவர், தன் வாழ்வில் இறைவனுக்கு உகந்த செயல்களைச் செய்யவில்லை என்றால் அவர் பொய்யர். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள், வெளிவேடக்காரர்கள் எனக் கிறிஸ்துவே இதை நமக்கு சொல்லியிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அன்னை தெரசாவும் இந்த நற்கருணை முன்பாக மணிக்கணக்காக இறைவனிடம் உறவாடியே தன் அன்பு வாழ்வுக்கு தேவையான சக்தியைப் பெற்றார். ஏழை எளிய மக்கள், ஆதரவற்ற முதியோர்கள், கைவிடப்பட்ட குழந்தைகள், தொழுநோயாளர்கள் ஆகியோருக்கு இவருக்கு காட்டிய அபரிமித பரிவாகவும் பாசமாகவும் உலகெங்கும் பரவி ஆட்கொண்டது. கல்வாரி மலை உச்சியில் சிலுவை மரத்தின்மீது இயேசு தன் உடலையும் இரத்தத்தையும் பலியாக்கியது ஒரு முறை மட்டும் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியல்ல. "இதை என் நினைவாக செய்யுங்கள்" என்று கிறிஸ்து கூறியதன் மூலம் தினமும் திருப்பலியின் போது தம் உடலையும் திருரத்தத்தையும் நமக்கு

காணிக்கையாக வழங்கிக் கொண்டிருக்கிறார் தியாகத் திருவுருவான இறைவன். எம்மாவுஸ் சீடர்கள் அப்பம் பிடுகின்ற நிகழ்விலே இயேசுவைக் கண்டு கொண்டார்கள். உணவின் வழியிலே நம் பாவக் கறைகளை அகற்றிப் புனித வாழ்வு வாழ நாம் முற்படுவோம். ஒவ்வொரு முறையும் திருப்பலியில் கலந்து கொள்கின்றபொழுது தகுந்த தயாரிப்புடன் தகுந்த மனநிலையோடு இயேசுவைப் பெறுவோம் கிறிஸ்துவோடு ஒன்றித்த நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வோம்.

## தூய பதுவை அந்தோணியாரின் வாழ்வு தரும் பாடம்

திரு. லூயிஸ் சகாயராஜ்

ஜூன் மாதம் 13ம் நாள் நாம் தூய அந்தோணியாரின் விழாவைக் கொண்டாடுகிறோம். ஆனால் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அந்தோணியாரின் நாளாகக் கொண்டு பல்வேறு நேர்த்திக் கடன்களை வைத்து, உபவாசம், நோன்பிருந்து பயபக்தியுடன் அந்தோணியார் திருத்தலங்களை நாடிச்சென்று செபிக்கும் வழக்கம் நம்மிடையே மிக அதிகமாய் உள்ளது. ஞாயிறு திருப்பலியில் பக்தியை தவறாமல் கடைபிடிக்கிறார்கள். ஏனெனில், தூய அந்தோணியாரிடம் வேண்டுதல் வைத்து அது நிறைவேறிவிடும் என்ற அளப்பரிய நம்பிக்கையே. ஆனால், புனித அந்தோணியார் தனது வாழ்வாலும், புதுமையாலும் போதனையாலும் சுட்டிக்காட்டுவது அவர்மீது கொள்ளும் பற்று அல்ல. மாறாக, அவரது கரங்களில் ஏந்தும் பேறு பெற்றவராய், அவரை நாடி வந்து, அருள்புரியும் இயேசுவின் மீது கொள்ளும் நம்பிக்கையையே. புனித அந்தோணியாரின் வாழ்வு நம்மில் பலருக்கும் மிகவும் பரிச்சயம். ஆனால் அவர் தனது வாழ்க்கை மூலம் நம் ஒவ்வொருவருக்கும் தரும் பாடம் என்ன?

**கற்பு:** புனித பதுவை அந்தோணியார் கோடி அற்புதர் என நம்மால் பாசத்தோடு அழைக்கப்படுகிறார். அவர் தனது வாழ்வு முழுவதும் கற்பின் மேன்மையைக் காத்து அதன் மூலமாக அற்புதம் செய்யும் ஆற்றலைப் பெற்றுக்கொண்டார் எனில் மிகையன்று. சிறுவயது முதல் தன் சொல், செயல், சிந்தனையில் மிகவும் கண்ணியம் காத்து, துறவற வாழ்வில் கடுந்தவ முயற்சிகளாலும், இறைப்பற்றினாலும் தனது கற்பு நெறியில் தவறாமல் வாழ்ந்த நம் புனிதர், தான் செய்யும் அனைத்திலும் வெற்றியும், மகிமையும் கண்டார். நாம் வாழும் இந்நாட்களில் கற்பு நெறி காத்து வாழ்வது என்பது மிகப்பெரிய சவால். துறவறத்தாருக்கும், இல்லறத்தாருக்குமே இது பொருந்தும். ஏனெனில், பணம், பதவி, பட்டம், மோகம் இவற்றையடைய நடக்கும் போராட்டத்தில் கற்புநெறி தவறாமல் நடப்பது என்பது மிகக் கடினமாகவே உள்ளது. நம் உள்ளங்கைகளில் உலகைக் கொண்டு வந்த நாம் உள்ளத்தைக் கெட்டுப் போகாமல், பார்த்துக் கொள்ள முடியவில்லை. புலனடக்கம் அவையடக்கம். இரண்டுமின்றி கட்டுக்கோப்பற்ற வாழ்வால் ஆசைமேல் ஆசை கொண்டு நம் இயல்பையே அழித்துக்கொண்டிருக்கும் நாம், புனித அந்தோணியாரைக் கண்டு, எந்நிலையிலும் தளரா மனம் கொண்டு வாழவும், உறுதியுடைய உள்ளத்துடன் மட்டற்ற ஆசைகளை அடக்கி வெற்றி காணவும், அதன்மூலம் நம் வாழ்விலும் அதிசயங்கள் அற்புதங்களைக் காணவும் விழைவோம்.

**கீழ்ப்படிதல்:** துறவறமோ, இல்லறமோ அது நல்லறமாவது கீழ்ப்படிதல் எனும் நற்பண்பினால்தான். புனித அந்தோணியாரின் கரங்களில் வெண்லீலி மலர்கள் இருப்பதைக் காண்கிறோம். திருக்குடும்பக் காவலராம் புனித யோசேப்புக்கு அடுத்து வெண்லீலி தாங்கிய புனித அந்தோணியார் எனில் மிகையாகாது. கற்பின் மேன்மையின் அடையாளத்துடன் துலங்கும் புனித அந்தோணியாரின் உயர்நிலைக்கு அவர் கொண்டிருந்த கீழ்ப்படிதல் என்ற புண்ணியமே காரணமாகும். எந்த நிலையிலும் அவர் தனது கீழ்ப்படிதலை விட்டுக்கொடுத்தது இல்லை. தனது இறைவேண்டல்களின் பலனாக பல வல்ல செயல்களை செய்ய இறைவன் அவருக்கு அருள்புரிந்துள்ளதை அறிந்தும், உணர்ந்தும், தனது தலைவர்களுக்கு கீழ்ப்படிந்தே வாழ்ந்தார். ஒரு நாளைக்கு 13 புதுமைகள் மட்டுமே செய்ய ஆணையிடப்பட்டிருந்த புனித அந்தோணியார், ஒரு மாலை வேளையில் கட்டடத்தின் மேலிருந்து ஒருவர் விழுவதைக் கண்டு, அவரைக் காப்பாற்றும் நல்லெண்ணத்தில் அம்மனிதரை அந்தரத்தில் நிறுத்திவிட்டு, 14வதாக வல்ல செயல் செய்ய தனது மடத்து தலைவரிடம் அனுமதி பெற்று அம்மனிதனைக் காப்பாற்றினார். இத்தகைய கீழ்ப்படிதல் நமது குடும்பங்களிலும், துறவற சபைகளிலும், குழுக்கள் மத்தியிலும் இருந்துவிட்டால், புனித அந்தோணியாரைப்போல் கீழ்ப்படிந்து வாழவும், அதன்மூலமாக நமது வாழ்வை அழகுள்ளதாக்கவும் விழைவோம்.

**எளிமை:** இறையாற்றல் நிரம்பியவராக வாழ்ந்து, அற்புதங்களை அன்றாடம் செய்தவராக இருந்தாலும், புனித அந்தோணியாரின் வாழ்வு எளிமைக்கு இலக்கணமாகவே திகழ்ந்தது. எனில் வாழ்வு முறைகளாலும், கடுந்தவ உபவாச செயல்களாலும் தனது இறையுணர்வையும், நம்பிக்கையையும் அதிகரித்துக் கொண்டவர் தாம் நம் புனிதர். அவரைக் கொண்டாடி மகிழும் நாம் சிந்திப்போம். நம் வாழ்க்கையில் துறவறமோ இல்லறமோ எந்த நிலையாக இருப்பினும் எளிமை என்பது கேள்விக்குறியே. மனதில் எளிமையாயிருந்தால் மட்டுமே மாற்றங்களை, ஏற்றங்களை நம்மால் அளிக்க முடியும். விண்ணரசிற்கு உரியவராகவும் முடியும். இக்காலக்கட்டத்தில், நம்மால் எளிய மனம் கொண்டு வாழ்வது சாத்தியமன்று. இருப்பதைக் கொண்டு நிறைவு காண்கிறோமா? அல்லது இல்லாததைத் தேடி அலைந்து திரிகிறோமா? அன்பு வளர்ந்து அருள் மொழிகிறோமா, அல்லது வம்பு வளர்த்து இருளில் வீழ்கிறோமா? நீதிக்காக குரல் கொடுக்கிறோமா? அல்லது நீதியின் குரலை மழுங்கடிக்கிறோமா?... நல்ல மனிதராய் வாழ்வதற்கு நல்ல மனம் இருந்தால்போதும். புனித அந்தோணியாரைப் போன்று நல்ல மனம் கொண்டு வாழவும், எளிய வாழ்க்கை முறையால் நறுமணம் வீசவும் ஆசைப்படுவோம். மாட்டுக் குடிலில் எளிய கோலத்தில் பிறந்த நம் ஆண்டவர், எளிய மனத்தினரான புனித அந்தோணியாரின் கரங்களில் தவழ்ந்தார். நாமும் எளிமையாக வாழ்ந்து பக்குவப்படுவோம். இறைவன் புனித அந்தோணியாரைப் போன்று நம்மையும் வலிமைப்படுத்த விழைவோம்.

**இறுதியாக...** மாபெரும் புனிதராகப் போற்றப்படும் புனித அந்தோணியாரின் வாழ்க்கையின் அடிப்படையில் அவர் கொண்டிருந்த நற்கருணைப் பற்றினை நாமும் தெரிந்துக்கொள்வோம். கற்பின் கீழ்ப்படிதலின், எளிமையின் இருப்பிடமாகிய நம் ஆண்டவர் இயேசுவின் உயிருள்ள பிரசன்னமாகிய நற்கருணையை நாமும், நாளும் கொண்டாடி புனித அந்தோணியாரின் வழியில் நலன்களைப் பெறுவோம். பதுவை நகர் புனித அந்தோணியாரே ஏழ்மையிலும், கற்பிலும் தவறாமலும், கீழ்ப்படிதலின் பிள்ளைகளாகவோம் எளிய மனம் கொண்ட மக்களாகவும் வாழ வழிகாட்டி அதன் மூலம் எம் வாழ்வில் நாங்களும் நாளும் அற்புதம் காண அருள்புரிவீராக ஆமென்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

**இவ்வுலகை மாற்றியமைக்க உதவும் விசுவாசம்** உண்மையான விசுவாசம் என்பது, இவ்வுலகை மாற்றியமைக்கவும், உயரிய மதிப்பீடுகளை பரப்பவும், இதைவிட சிறந்த உலகை அடுத்த தலைமுறைகளுக்கு விட்டுச் செல்லவும் ஆழமான ஆவலைக் கொண்டுள்ளது என பெல்ஜியம் நாட்டிலிருந்து தன்னைச் சந்திக்க வந்திருந்த "லோஜியா" (Logia) என்ற அமைப்பினரிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். சமூகத்துறையிலும், பல்வேறு விவாதங்களிலும் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு இடம் கொடுத்தல் என்ற நோக்கத்தில் துவக்கப்பட்ட இந்த அமைப்பின் அங்கத்தினர்களை திருப்பீடத்தில் சந்திக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் படிப்பினைகளைப் பின்பற்றுவது என்பது, நம் மனிதாபிமானத்தை இழக்க உதவுவதில்லை. மாறாக, மனிதாபிமானமும், சகோதரத்துவமும், நீதியும் நிறைந்த உலகை கட்டியெழுப்பவே உதவுகின்றது என கூறினார். இயேசுவின் நற்செய்தி நம்மை பாவங்களிலிருந்தும், கவலைகளிலிருந்தும், உள்மன வெறுமைகளிலிருந்தும், தனிமை உணர்வுகளிலிருந்தும் விடுவித்து, யாராலும் பரிக்க முடியாத மகிழ்வை நமக்குத் தருகின்றது என்று கூறியத் திருத்தந்தை இந்த மகிழ்வைப் பெறுவதற்கு செபிப்பதும், அருளடையாளங்களை அணுகுவதும் அவசியம் எனவும் கூறினார்.

**சிரியா, உலகின் அமைதிக்காக செபமாலை செபியுங்கள்**

இறைவனின் அன்னைக்கு ஒவ்வொரு நாளும் செபமாலை செபித்து, சிரியாவிலும், உலகமனைத்திலும் அமைதி நிலவுவதற்காக ஒப்புக்கொடுக்குமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்தார். மேலும், நாம் எந்தளவுக்கு கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோமோ, அந்தளவுக்கு கிறிஸ்துவை நம்மில் வாழ அனுமதிக்கின்றோம் என்ற சொற்கள், திருத்தந்தையின் டுவிட்டரில், இப்புதன்கிழமையன்று வெளியிடப்பட்டுள்ளன.

**நல்ல ஆயர் தன் மந்தைமீது எப்போதும் கவனமுடன் இருப்பார்**

ஆயர்கள், தங்களின் மறைமாவட்ட மக்களின் வாழ்வில் ஈடுபட்டு, அவர்களுக்கு நெருக்கமாக இருந்து, அம்மக்களை ஓநாய்களிடமிருந்து பாதுகாப்பதற்கு எப்போதும் விழிப்பாய் இருக்குமாறு மறையுரையாற்றினார்

திருத்தந்தை பிரான்சிஸ். தன் மறைமாவட்ட மக்களின் விசுவாசத்தைக் காத்து, அதில் அவர்களை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ள ஆயர்களின் பணி பற்றி விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையில், ஆடுகளின் பாதுகாவலர்கள் குறையாமல் இருக்க வேண்டுமென்று கூறினார். ஆயர்கள் மிகவும் கவனமுடன் இருந்து, தன் ஒவ்வோர் ஆட்டின் பெயரையும் அறிந்துள்ளார் என்றும், இவ்வாறு இயேசு ஆயராக இருந்தார் என்றும், மறையுரையில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். தங்கள் ஆடுகளைப் பாதுகாக்கும் நல்ல மேய்ப்பர்களை ஆண்டவர் எப்போதும் நமக்கு அருளுமாறு செபிப்போம். நல்ல ஆயர்கள் இன்றி நாம் முன்னோக்கிச் செல்ல இயலாது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து ஆயர் கவலை**

அடிப்படைவாத இந்துக்களின் வன்முறையும், பாகுபாடுகளும் அதிகரித்து வருவது குறித்து தமிழ் நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர் என்று தமிழ் நாட்டின் கத்தோலிக்க ஆயர் ஒருவர் தெரிவித்தார். Aid to the Church in Need எனப்படும், பன்னாட்டுக் கத்தோலிக்க பிறரன்பு நிறுவனத்திடம் இவ்வாறு கூறிய, திண்டுக்கல் ஆயர் தாமஸ் பால்சாமி அவர்கள், இந்தியாவில், இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே உறவுகள் பலவீனமடைந்து வருவதற்கு முக்கிய காரணம், நரேந்திடமோடி அவர்கள் அதிகாரத்திற்கு வந்ததே எனத் தான் நம்புவதாகத் தெரிவித்தார். பிஜேபி கட்சி ஆட்சிக்கு வருமுன்னர், இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே உறவுகள் மிக அமைதியாகவும், நல்லிணக்கத்துடனும் இருந்தன என்றும், மோடி அவர்கள் பிரதமரான பின்னர் இந்த அடிப்படைவாதக் குழுக்கள் மிகவும் சக்திமிக்கவையாக மாறியுள்ளன என்றும் கருத்து தெரிவித்துள்ளார் ஆயர் பால்சாமி. தமிழ்நாட்டில் குறைந்தது நகரங்களில், பல்வேறு கிறிஸ்தவ சபைகளில் ஏறத்தாழ இருபதாயிரம் கிறிஸ்தவர்கள், பேரணிகளை நடத்தி, கிறிஸ்தவர்க்கெதிரான வன்முறைகளுக்கு கண்டனம் தெரிவித்ததையும் குறிப்பிட்டார் ஆயர் பால்சாமி. இந்தியாவில் பிஜேபி கட்சி ஆட்சியில் இருக்கும்வரை, கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு கடினமானதாகவே அமையும் என்று கவலை தெரிவித்த ஆயர் பால்சாமி அவர்கள், இவ்வாண்டு துவங்கியதிலிருந்து தமிழ்நாட்டில், கிறிஸ்தவர்களுக்கு எதிராக 15க்கும் மேற்பட்ட வன்முறை தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன எனவும் கூறினார்.

**திருஅவைக்கு களங்கம் வருவிக்கின்ற போலிக் கடிதத்திற்கு கண்டனம்**

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மை சமூகத்தினர் மத்தியில் மதமாற்றங்களை நடத்துவதற்கு, இந்தியத் திருஅவை திருப்பீடத்துடன் சேர்ந்து சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்று வெளியிடப்பட்டுள்ள கடிதம் தீய நோக்கம் கொண்ட போலி கடிதம் என்று சொல்லி, அக்கடிதத்திற்கு எதிரான தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது தலத்திருஅவை. இப்போலிக்கடிதம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள, இந்திய ஆயர் பேரவையின் பொதுச் செயலர் ஆயர்

தியோடர்மஸ்கரீனஸ் அவர்கள், அப்போலிக்கடிதம், கத்தோலிக்கத் திருஅவையின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இப்போலிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று இந்திய ஆயர் பேரவையோ, கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்களோ, பிரிவினைகளை ஏற்படுத்தும். இத்தகைய யுக்திகளில் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்றும், ஆயர் மஸ்கரீனஸ் அவர்கள் கூறியுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி - 47 சரியான விடைகள்

1. தூய அத்தனாசியார்
2. தூய யாக்கோபு
3. 1881
4. தூய மத்தியாஸ்
5. தூய லெயனார்து முரியால்தோ
6. அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி
7. மதசார்பற்ற ஒரு நாட்டில் அதுவும் கிறிஸ்தவர்களின் புனித நாளன்று கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது
8. 9ஆம் பத்திநாதர்
9. கலிலேயவில் உள்ள பெத்சாயிதா
10. தூய மரிய மசரெல்லோ
11. தூய மத்தியாஸ்
12. தூய லெயனார்து முரியால்தோ
13. பெந்தகோஸ்தே பெருவிழா
14. தூய மரிய மசரெல்லோ
15. 12ஆம் பத்திநாதர்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. A. Vinanle Mary, கன்னியாகுமரி
2. Mrs. ஜெசிஸ்டீபன், ராகவன்பேட்டை
3. Sr. மெல்கியூர், கோயம்புத்தூர்

## சுடர் வாசகர் போட்டி - 48

1. இயேசுவின் திரு இருதய பக்தியை அரசாட்சியை நிறுவ நாம் என்ன செய்ய வேண்டும்?
2. தூய போனிபாஸ் குருவானவரானவுடன் நற்செய்தி அறிவிக்க எந்த நாட்டிற்கு சென்றார்?
3. நல்ல ஆயர்கள் இன்றி நாம் முன்னோக்கிச் செல்ல இயலாது என்று கூறியது யார்?
4. திருத்தந்தை பத்திநாதர் இயேசுவின் திரு இருதய பக்தியை எப்பொழுது அறிவித்தார்?
5. நற்செய்தி அறிவிக்க சென்ற இடமெல்லாம் தூய பவுலுக்கு உற்றத் துணையாக இருந்தவர் யார்?
6. இரத்தம் சிந்துதலின் அடையாளம் எதைக் குறிக்கிறது?
7. சிலுவை அடையாளம் வரைந்து பேயை விரட்டியவர் யார்?
8. திருத்தந்தை 9ம் கிரகோரி என்ன பட்டதை நம் புனிதருக்கு வழங்கினார்?
9. "துயரம் நிறைந்த" என்ற அடைமொழி யார்மீதுள்ள அன்பினால் அன்னை ஏற்றுக்கொண்டாள்?
10. நம் தேவனாகிய ஆண்டவர் எம்மை என்னவாக உருவாக்க நினைக்கின்றார்?
11. நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரென தம் கோவிலுக்கு வருவார் என எந்த அதிகாரத்தில், வசனத்தில் கூறியுள்ளது?
12. இயேசுவின் திருவுடல் திரு இரத்தம் நமக்கு எதைக் கற்பிக்கின்றது?
13. தூய அந்தோணியாருக்கு ஒருநாளைக்கு எத்தனை புதுமைகள் செய்ய ஆணையிட்டிருந்தார்?
14. சலேசிய கல்விமுறைக்கு உதாரணமானவர்கள் யாவர்?
15. திருத்தந்தை க.ஃபாஸோ எந்தாண்டு விண்ணக வாழ்வை அடைந்தார்?


### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:......................................
முகவரி:....................................
..............................................
..............................................
..............................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 13ஆம் ஞாயிறு
தூய தோமையார் இந்தியாவின் அப்போஸ்தலர் திருவிழா
தூய மரிய கொரற்றி திருப்பலி
அருளாளர் மரிய ரொமேரோ திருப்பலி
பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு
தூய பெனடிக்ட் திருப்பலி
தூய ஹென்றி திருப்பலி
பொதுக்காலம் 15ஆம் ஞாயிறு
தூய கார்மேல் அன்னை திருவிழா
பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு
திருத்தூதர் யாக்கோபு திருவிழா
தூய சுவக்கீன் அன்னம்மாள் திருவிழா
தூய அல்போன்சா திருவிழா
பொதுக்காலம் 17ம் ஞாயிறு
தூய இஞ்ஞாசியார்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

சலேசிய சபையும் தோமையாரும்
மரியாளின் வாழ்வில் தூய சுவக்கின் அன்னம்மாள்
தூய இஞ்ஞாசியார் வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

### அன்பு நிறை வாசகர்களே!

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூன் 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | புனித ஜஸ்டின் மறைச்சாட்சி - நினைவு | 1பேதுரு 4: 7-13 | மாற்கு 11: 11-26 |
| 2 | ச | புனித மார்சலின் புனித பீட்டர் | யூதா 17: 20-25 | மாற்கு 11: 27-33 |
| 3 | ஞா | கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா-பொதுக்காலம் 9ம் ஞாயிறு | I. வி.ப. 9: 3-8<br>II. எபி. 9: 11-15 | மாற்கு 14: 12-16, 22-26 |
| 4 | தி | | 2பேதுரு 1: 1-7 | மாற்கு 12: 1-12 |
| 5 | செ | புனித போனிபாஸ் | 2பேதுரு 3: 12-15, 17-18 | மாற்கு 12: 13-17 |
| 6 | பு | புனித நார்பெட் | 2திமொ. 1: 13, 6-12 | மாற்கு 12: 18-27 |
| 7 | வி | | 2திமொ. 2: 8-15 | மாற்கு 12: 28-34 |
| 8 | வெ | இயேசுவின் திருஇருதயம் - பெருவிழா | I. ஓசே.11: 1,3-4-9<br>II. எபே. 3: 8-12,14-19 | யோவா. 19: 31-37 |
| 9 | ச | தூய மரியன்னையின் திரு இருதயம் | 2திமொ. 4:1-8 | லூக். 2: 41-51 |
| 10 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 10ம் ஞாயிறு | I. தொ.நூ. 3: 9-15<br>II. 2கொரி. 4: 13-5:1 | மாற்கு 3: 20-35 |
| 11 | தி | புனித பர்னபா திருத்தூதர் | தி.ப.11: 21-26,13:1-3 | மத். 5: 1-12 |
| 12 | செ | | 1அரச. 17: 7-16 | மத். 5: 13-16 |
| 13 | பு | புனித பதுவை அந்தோணியார் | 1அரச. 18: 20-39 | மத். 5: 17-19 |
| 14 | வி | | 1அரச.18: 41-46 | மத். 5: 20-26 |
| 15 | வெ | | 1அரச. 19: 9,11-16 | மத். 5: 27-32 |
| 16 | ச | | 1அரச. 19: 19-21 | மத். 5: 33-37 |
| 17 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 11ம் ஞாயிறு | I. எசே. 17: 22-24<br>II. 2கொரி. 5: 6-10 | மாற்கு 4: 26-34 |
| 18 | தி | | 1அரச. 21: 1-16 | மத். 5: 38-42 |
| 19 | செ | புனித ரோமுவால்டு | 1அரச. 21: 17-29 | மத். 5: 43-48 |
| 20 | பு | | 2அரச. 2: 1,6-14 | மத். 6: 1-6,16-18 |
| 21 | வி | புனித அலோசியுஸ் கொன்சாகா | சீ.ஞா. 48: 1-15 | மத். 6: 7-15 |
| 22 | வெ | புனித நோலா பவுலீனுஸ், ரூ தாமஸ் மூர் | 2அரச. 11: 1-4,9-18,20 | மத். 6: 19-23 |
| 23 | ச | | 2குறி. 24: 17-25 | மத். 6: 24-34 |
| 24 | ஞா | திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா | I. எசா. 49: 1-6<br>II. தி.ப. 13: 22-26 | லூக். 1: 57-66,80 |
| 25 | தி | | 2அரச.17:5-8,13-15,18 | மத். 7: 1-5 |
| 26 | செ | | 2அரச. 19: 9-11,14-21 31-35,36 | மத். 7: 6,12-14 |
| 27 | பு | அலெக்சாந்திரியா நகர் புனித சிரில் | 2அரச. 22: 8-13, 23: 1-3 | மத். 7: 15-20 |
| 28 | வி | புனித இரனேயுஸ் | 2அரச. 24: 8-17 | மத்.7: 21-29 |
| 29 | வெ | புனிதர்கள் பேதுரு-பவுல் பெருவிழா | I. தி.ப. 12: 1-11<br>II. 2திமொ.4: 6-8,17-18 | மத்.16: 13-19 |
| 30 | ச | | புல. 2: 2,10-14,18-19 | மத்.8: 5-17 |